www.tamilarangam.net

சமர்

இதழ் 14 | தை/மாசி | அன்பளிப்பு 10F

# தொழிற் சங்கங்களின் தொடர்ச்சியான காட்டிக் கொடுப்புக்கள்

**இலங்கைத் தொழிலாளர்களின் போராட்டங்களை நசுக்கிவிட தொழிற் சங்கங்களே முண்டியடித்துக்கொண்டு நிற்கின்றன.**

"தொழில் பிணக்குகளைத் தீர்ப்பதற்கு அராஜகவழிகளை நாடவேண்டாம்" என கூட்டாக அறிக்கைவிட்டு துரோகத்திற்கு அழைப்புவிடும் இலங்கை தொழிற்சங்க சம்மேளனம், இலங்கை சுதந்திர சேவையாளர் சங்கம், இலங்கை தொழிலாளர் சம்மேளனம், அரசாங்க சேவைத் தொழிற்சங்க சம்மேளனம், தேசிய விடுதலை தொழிற்சங்க சம்மேளனம், இலங்கை சுதந்திர அரசாங்க தொழிற்சங்க சம்மேளனம், அகில இலங்கை அரசாங்க எழுதுவினைஞர் சங்கம், அரசாங்க எழுதுவினைஞர் சேவைச் சங்கம், அகில இலங்கை அஞ்சல் தொலைத் தொடர்புச்சேவைச் சங்கம் ஆகியவை தொழிலாளர்களைக் காட்டிக்கொடுக்கவும், அடக்கு முறைக்கு துணைபோகவும் அறைகூவல் விடுத்துள்ளன.

உள்ளே ☞

- தொடரும் துரோகம்...
- பேரு - ஒரு இரத் சாட்
- விவாதக் கட்டுரை
- போலிச் சாமிகள்

வேறும் பல...

சோவியத், சீனா திரிபுகளுடன் சாய்ந்து சீரழிந்து ஒரு முதலாளித்துவ தொழிற் சங்கமாக தங்களை இனம் காட்டிய பல சங்கங்கள், தொழிற் சங்கம் என்ற பெயரில் இருந்து கொண்டு தொழிலாளருக்கு அல்லாமல் முதலாளிகளுக்கே அசலாக உழைத்து வருகிறார்கள். தொழிலாளர்களைக் காட்டிக்கொடுத்து முதலாளியிடம் சலுகைபெற்று வசதிகளை தமதாகப் பெருக்கிக் கொண்டார்கள்.

இத் துரோகத் தலைமையின் மீது அதிர்ச்சியுற்ற தொழிலாளர்கள் தன்னியல்பாக கிளர்ந் தெழுகின்ற இன்றைய நிலையில் தனித்து நின்று மீண்டும் துரோகத்திற்கு அழைக்க முடியாது எனக் கண்ட இத் துரோகச்சங்கங்கள் கூட்டாக அழைப்பு விடுத்து தமது கைவரிசையைக் காட்டுகின்றன.

தொழிலாளர்களின் தன்னியல்பான போராட்டங்களைக் கண்டு தொடைநடுங்கி, வெகுண்டு கூட்டாகவிட்ட அறிக்கையில் "கடந்த சில தினங்களாக சில வேலைத்தளங்களில் சட்டத்திற்கு புறம்பானதும் அங்கீகரிக்கப்படாததுமான போராட்ட நடவடிக்கையில் தொழிலாளர்கள் ஈடுபடுவதைக் காணக்கூடியதாக இருக்கிறது" எனக் கூறி இப் போராட்டங்களைக் கண்டு தொழிற்சங்கங்களே அலறுகின்றன.

தொடர்ச்சி பக்கம் 12 இல்



# பாப்பரசரின் இலங்கை விஜயம் கபடம் நிறைந்தது

பாப்பரசரின் இலங்கை விஜயமும், அதன் நோக்கமும் கபடம் நிறைந்தது. இன்று உலகிலுள்ள உலகஒழுங்கமைப்பை பேணிப் பாதுகாப்பதில் மதங்கள் சிறப்பாகவே பங்காற்றிவந்துள்ளன. மக்களின் தேவைகளை இறைவன் மூலம் பெறமுடியுமென்ற மூடநம்பிக்கைகளை தமக்குச் சாதகமாகப் பயன்படுத்துகின்றன, இந்த ஏகாதிபத்தியங்கள்.

இலங்கையில் எழுந்த தேசியவிடுதலைப் போராட்டம், J.V.P இன் போராட்டங்கள் என்பன இறைவன் மூலமன்றி போராடிப்பெறும் வழிமுறைகளில் நகர்ந்தன.

தொடர்ச்சி பக்கம் 12 இல்

வெளியீடு : தமிழ் சக்திகள் இலக்கிய வட்டம் | பதிவு செய்யப்பட்டது - 3 \16956

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## மக்கள் யுத்த அரங்கில் ......

### ⊙ போல்சுவிக் புரட்சியை நினைவுகூடும் சோவியத் மக்கள்.

நவம்பர் – 7.

ருஷ்ய போல்சுவிக் புரட்சியின் 77வது ஆண்டு நிறைவு நாளை நினைவு கூர்ந்து பல்லாயிரக் கணக்கான சோவியத் ஒன்றிய மக்கள் ரஷ்யாவின் பல நகரங்களிலும் உக்ரைனிலும் ஊர்வலங்களை நடாத்தியுள்ளனர்.
ரஷ்யாவில் 20க்கும் மேற்பட்ட நகரங்களில் ஆயிரக்கணக்கான மக்கள் பங்கேற்ற ஊர்வலங்கள் நடைபெற்றன. செங்கொடியையும், லெனினின் உருவப் படங்களையும் தாங்கிய மக்கள் ஜெல்ட்சின் இற்கெதிராக முழக்கமிட்டதுடன் ஜெல்ட்சின் வீழ்க! அனைத்து அதிகாரங்களும் சோவியத்துக்கே! என முழங்கினர்.
உக்ரேன் தலைநகர் கீவ் இல் 8000வரையிலான கம்யூனிஸ்டுக்கள் பங்கேற்ற ஊர்வலம் உக்ரைனின் தற்போதைய அரசின் சந்தைப்பொருளாதார மறுசீரமைப்பு கொள்கைக்கெதிராக கோஷமெழுப்பிச் சென்றது. கம்யூனிஸ்டுக்களுக்கும் இவ்வூர்வலத்தை தடுத்துநிறுத்த முற்பட்ட உக்ரைன் தேசியவாத கட்சியினருக்குமிடையே மோதல் மூண்டதையிட்டு பொலிசார் தலையிட்டு கலகத்தை அடக்கநேரிட்டது.

### ⊙ "ஒளிரும் பாதை" புரட்சியாளர்கள் பெரு அரசபயங்கரவாதிகள் மீது தாக்குதல்.

நவம்பர் – 9.

பெருவினது தலைநகர் 'லிமா' விற்கு தென்கிழக்கே 300 கி.மீ தூரத்திலுள்ள அன்டியான் மலைப்பகுதியில் கம்யூனிஸ்ட் கெரில்லாக்கள் அரசபடையினரைத் தாக்கினர். 3 அரசபடையினர் கொல்லப்பட்டு, 7 பேர் காயமடைந்ததாக அரசதரப்புச் செய்திகள் தெரிவித்துள்ளன. ஒளிரும் பாதை கெரில்லாக்களை முற்றாக அப்புறப்படுத்தி விட்டதாக பெரு அரசு கூறியிருந்த எஸ்மெரல்டா பகுதியிலேயே இத்தாக்குதல் ஒரு மணி நேரம் நீடித்ததாக செய்திகள் தெரிவிக்கின்றன. ஒளிரும்பாதை கெரில்லாக்கள் பலமிக்க பகுதியாகவிருந்த இப்பிரதேசத்தில் கடந்தவாரம் ஊடுருவியிருந்தது தெளிவாகத் தெரிந்துள்ளதெனவும், முன்பு இழந்த பிரதேசங்களை மீளக்கைப்பற்ற கெரில்லாக்கள் முயன்றுவருகிறார்களெனவும் இராணுவத்தரப்புடன் தொடர்பான செய்திகள் தெரிவித்துள்ளன. இப்பகுதியில் செப்ரம்பர் இறுதி வாக்கிலும், ஒக்டோபர் முதல் வாரத்திலும் ஒளிரும்பாதை கெரில்லாக்கள் 6 அரசபடையினரைக் கொன்று 17 பேரைக் காயப்படுத்தியுள்ளனர். நவம்பர்–9. திகதி அரச படையின் மீது தாக்குதல் நடத்திய கெரில்லாக்கள் ஒளிரும்பாதை கெரில்லாத் தலைவர் ஒஸ்கார் ரமிரேஸ் டுரான் இனது பலமான தளமான 'விஸ்காரன்' காட்டுப்பிரதேசத்துக்கு தப்பிச்சென்றுள்ளதாக அரசபடைகள் தெரிவித்துள்ளன.

### ⊙ பிலிப்பைன்ஸ் தலைநகர் மணிலாவில் ஏகாதிபத்தியத்தையும், கிளிண்டனையும் வெளியேறு! எனக்கோரி மாணவர்கள் ஊர்வலம்.

நவம்பர் – 10.

அமெரிக்க ஜனாதிபதி பில் கிளிண்டன் பிலிப்பைன்ஸ் தலைநகர் மணிலாவுக்கு விஜயம் செய்ய இருப்பதற்கெதிராக அமெரிக்க ஏகாதிபத்தியத்தையும் கிளிண்டனையும் வெளியேறு! எனக்கோரி சுமார் 800 மாணவர்கள் மணிலாவில் எதிர்ப்பு ஊர்வலமொன்றை நடாத்தினர்.

### ⊙ "ஒளிரும் பாதை" புரட்சியாளர்கள் தலைநகர் லிமா வில் வங்கிகள் மீது குண்டுவீச்சு.

நவம்பர் – 11.

பெருவின் பெரிய வங்கியான 'பங்க் டு கிறடிற்ரேறா' இனது அலுவலகங்கள் இரண்டின் மீது தலைநகர் லிமாவில் கம்யூனிஸ்ட் கெரில்லாக்கள் குண்டுவீசித் தாக்கியுள்ளனர். தொழிலாளர் செறிந்துள்ள பகுதிகளான "லா விக்டோரியா"விலும், 'பிறினா'விலும் நடைபெற்ற இத்தாக்குதலில் வங்கிகள் சேதமாகியுள்ளனவெனிலும் உயிர்ச்சேதம் எதுவுமேற்படவில்லையென பொலிஸார் தெரிவித்துள்ளனர். அதிகாலையிலும் மறுநாள் நடு இரவிலும் குண்டுவீச்சு நடைபெற்றுள்ளதாலேயே உயிர்ச்சேதம் தவிர்க்கப்பட்டுள்ளதென தெரிவிக்கப்படுகின்றது.
இத்தினத்தில் கெரில்லாக்கள் விமானப்படை அலுவலக விடுதிக்கு முன்பாக நிகழ்த்திய கார்குண்டுவெடிப்பில் எவ்வித பாதிப்பும் விமானப்படையினருக்கு ஏற்படவில்லையென பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

### ⊙ கிழக்குத் திமோர் தலைநகரில் சுதந்திரத்திற்காக குமுறுகின்ற மக்களின் போர்க்கோலம்.

நவம்பர் – 12.

19 ஆண்டுகால இந்தோனிசியா ஆக்கிரமிப்பை எதிர்த்து கிழக்குத் திமோரின் சுதந்திரத்தையும், தமது விடுதலை இயக்கமான 'பிறேற்றிலின்' தலைவரை விடுவிக்கவும் கோரி தலைநகர் 'டிலி'யில் வீதியில் இறங்கிய ஆயிரக்கணக்கான கிழக்குத் திமோரியமக்கள் இந்தோனிசியப் பொலிஸாருடன் கோபாவேசமாக மோதினர். அந்நிய இந்தோனிசியரின் கடைகளைச் சூறையாடியும், கார்களைத் தீயிட்டும் தமது குமுறலை வெளிப்படுத்தினர். தலைநகரில் பரவலாக பொலிஸாருடன் கற்களுடனும், குண்டாந்தடி, ⊃



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

போத்தல்களுடனும் மக்கள் மோதலில் இறங்கினர். இந்தோனிசியா கிழக்குத்திமோரை ஆக்கிரமித்தபின் இந்தோனிசியர்கள் கிழக்குத் திமோரின் வேலைவாய்ப்புகள் வர்த்தகம் என்பவற்றை இம்மக்களிடமிருந்து பிடுங்கிக்கொண்டனர். நிராயுதபாணியான கிழக்குத் திமோரியமக்களை இந்தோனேசியத் துருப்பகள் படுகொலைசெய்ததின் 3வது நினைவுதினத்தைத் தொடர்ந்தே இவ் ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது. நவம்பர்–12. 1991ல் இந்தோனிசிய ஆக்கிரமிப்புப்படைகள் 200க்கும் மேற்பட்ட அப்பாவிமக்களைப் படுகொலை புரிந்தும், நூற்றக்கணக்கானோரை காயப்படுத்தியும் அட்டகாசம் புரிந்தது.

இந்தோனிசியத் தலைநகர் 'ஜகாத்தா'விலும் 30 கிழக்குத்திமோர் மாணவர்கள் அமெரிக்கத்தூதரக வளாகத்தினுள் புகுந்து 'பிறெற்றிலின்' கெரில்லாத்தலைவர் 'ஷனானா குஸ்மாயோ'வின் விடுதலையைக்கோரியும், இந்தோனிசிய ஆக்கிரமிப்பாளர்கள் கிழக்குத்திமோரில் படுகொலைகளை நிறுத்தக் கோரியும் தூதரகவளாகத்தினுளிருந்து வெளியேற மறுத்து தொடர்ந்து தமதுநாட்டின் நிலைமையையும் இந்தோனிசிய ஆக்கிரமிப்பாளர்களின் படுகொலையையும் வெளியுலகிற்கு உணர்த்தி வருகின்றார்கள்.

1975ல் போர்த்துக்கேய காலனியிலிருந்து கிழக்கத்திமோர் விடுபட்டதன்பின் இந்தோனிசியா பலவந்தமாக ஆக்கிரமித்து அம்மக்களை கொன்றொழித்து வருகின்றது. ஐக்கிய நாடுகள் சபை இவ் ஆக்கிரமிப்பை அங்கீகரிக்கவில்லை. 'குவைத்' இற்காக கூக்குரலிட்ட ஜனநாயகத்தின் காவலர்கள் கிழக்குத்திமோரில் இடம்பெறுகின்ற, அட்டூழியங்கள், படுகொலைகள் பற்றி கண்களை இறுக மூடிக்கொண்டுள்ளனர். ஜகாத்தாவில் நடைபெறுகின்ற ஆசிய–பசுபிக் வர்த்தக கூட்டறவு மையத்தின் ஆலோசனைக் கூட்டத்தில் ஆசியநாடுகளை ஒட்டச்சுரண்ட திட்டம் வகுக்கும் இவ் மனிதகுல எதிரிகள் இந்தோனிசியாவுடன் செய்துகொள்ளும் பில்லியன் டொலர்களிலான சுரண்டல் ஒப்பந்தங்களில்தான் குறியாக உள்ளனரே தவிர மனிதகுல எதிரிகளுக்கு மனிதஉரிமைகள் மீது ஏது அக்கறை?

## ⊙ஆந்திரத்தில் கேட்கும் வசந்தத்தின் வெடிமுழக்கங்கள்.

நவம்பர்–25.

மார்க்சிய, லெனினிய, மாசேதுங் சிந்தனைகள் இன்றய புதியநிலைமைகளில் தோன்றியுள்ள பல சமூகப்பிரச்சனைகளுக்கு தீர்வளிக்க வக்கற்றுப்போயுள்ளன. அதனாலேயே இவற்றை ஏற்றுள்ள சக்திகள் சிறுகுழுக்களாக, வரட்டுவாதிகளாக, புரட்சியை முன்னெடுக்கும் சக்தியற்றவர்களாக உள்ளனர் என அரசியல் பிரமுகர்களாகவிருக்கும் புத்திஜீவிகளும், தமது தனித்தேசியவாதத்திற்கு புரட்சிகர வர்க்கமுலாம் பூச, உழைக்கும் வர்க்கங்களின் போராட்டப்பாதையுடன் எத்தொடர்பும் கொண்டிராதிருக்கும் புத்திஜீவிகளது தத்துவ இறக்குமதிகளை சுவீகரித்துக்கொண்டுள்ள ஈழத்தின் தனித்தேசியவாதிகளும், நகரத்தின் அறைகளினுள் இருந்து தமது ஆய்வுகளை வெளியிடுகின்றபோதே இந்தியாவின் எண்ணற்ற கிராமங்களில் உழைக்கும் வர்க்கத்தவரின் புரட்சிகரப்போரில் குருதி சிந்தி, புரட்சித்தீயாக படர்ந்துவருகின்றவர்கள் மார்க்சிய, லெனினிய, மாவோ சிந்தனைகளை ஏற்றுப்போராடும் புரட்சியாளர்களே!

மார்கழி மாத முற்பகுதியில் ஆந்திரத்தில் நடந்த சட்டமன்றத்தேர்தலை புறக்கணித்து புரட்சிகர ஆயுதப்போராட்டத்தில் மக்களை அணிதிரளக்கோரிய மக்கள் யுத்தக் குழு (PWG) என்ற நக்சல்பாரி புரட்சிகர அமைப்பு அரசபடைகளுக்கெதிரான பல தாக்குதல்களை நடாத்தியுள்ளது. இந்தியாவை அந்நிய நாடுகளுக்கு தாரைவார்த்துவிட்டுள்ள பிரதமர் நரமசிம்மராவ் பிரச்சாத்திற்கு வருவதற்கு ஒருதினம் முன்பாக கரீம்நகர் மாவட்டத்தில் மாகாதேவ்பூர் எனுமிடத்தில் பஞ்சாப் பொலிஸ்கமாண்டோக்களுக்கு எதிராக தொடுத்த கண்ணிவெடித்தாக்குதலில் 16 பொலிஸார் உயிரிழந்துள்ளனர். பிறிதொரு இடத்தில் நடாத்தப்பட்ட கண்ணிவெடித்தாக்குதலில் 7 பொலிஸார் உயிரிழந்துள்ளனர். மக்கள் யுத்தக்குழுப் புரட்சியாளர்கள் ஆந்திராவின் பல மாவட்டங்களில் செல்வாக்குப் பெற்றிருப்பதோடு அடர்ந்த காட்டுப்பகுதிகளையண்டி தமது கட்டுப்பாட்டுப் பிரதேசங்களை கொண்டுள்ளனர். கடந்த 3 வருடங்களில் நூற்றுக்கும் மேற்பட்ட பொலிஸார் புரட்சியாளர்களை ஒடுக்க மேற்கொண்ட நடவடிக்கைகளில் உயிரிழந்துள்ளனர். உயர்பொலிஸ் அதிகாரி ஒருவர் கருத்து தெரிவிக்கும்போது "நக்சலைட்டுகளின் கட்டுப்பாட்டுப்பகுதிகளில் நாங்கள் வாகனங்களில் பயணம் செய்வதில்லை. ஏனெனின் எமது வாகனங்கள் கண்ணிவெடிகளில் வெடித்துவிடும் நிலைமையுள்ள"தென குறிப்பிட்டுளார். புரட்சியாளர்களின் அச்சுறுத்தலிலிருந்து தேர்தல் நடவடிக்கைகளை பாதுகாக்க ஆயிரக்கணக்கான பராமிலிட்டரி பொலிஸார் மற்றய மாநிலங்களிலிருந்து வரவழைக்கப்பட்டு ஆந்திராவில் குவிக்கப்பட்டுள்ளனர்.

## ⊙சீரழியும் சீனத்தில் போராட ஆரம்பிக்கும் விவசாயிகள்...

மார்கழி– இறுதி வாரம்.

மிக மோசமான நிலப்பிரபுத்துவ சுரண்டலிலிருந்து சீன விவசாயிகளை மீட்டது தோழர் மாவோ தலைமைதாங்கிய மகத்தான சீனப்புரட்சி. செஞ்சீனம் இன்று டெங் திரிபுவாதக் கும்பலால் அப்பட்டமான முதலாளித்துவ நாடாக மாறிச்செல்கின்றது. புதிய எஜமானர்களது லாப நலன்களுக்காக நிலங்களை இழக்கும் விவசாயிகள் ➲



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

போராட ஆரம்பித்துள்ளனர்.

தென் சீனாவின் சுகாய்(Zhuhai) பிரதேசத்தில் உள்ள சிறப்பு வர்த்தக வலய பகுதியில் மார்கழி இறுதி வாரத்தில் சீன விவசாயிகளின் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. வர்த்தக நோக்கங்களுக்காக தமது நிலங்களைப் பறித்ததற்கும் போதிய நட்டஈடு வழங்காததையும் எதிர்த்து திரண்ட 500 இற்குமதிகமான சீன விவசாயிகள் அரசாங்க அலுவலகத்தின் முன் கலகத்தில் இறங்கினர். கலகத்திலீடுபட்ட சீன விவசாயிகளை கலைந்து போகச்செய்வதற்கு பாதுகாப்பு உத்தியோகஸ்தர்கள் கண்ணீர்ப்புகை குண்டுகளை வீசியதாக ஹொங் ஹொங்கிற்கு கிடைக்கப்பெற்ற செய்திகள் தெரிவிக்கின்றன.

சீனத்தின் கிராமப்பகுதிகளில் தோழர் மாவோவும், செங்கொடியும் அசைய கிராமங்களில் தமது பிரதிநிதிகளை கட்சிசூதாட்ட அரசியலின்றி அனைத்து மக்களும் தெரிவுசெய்வதையும் கூட்டு உழைப்பிலீடுபட்டு கூட்டு வாழ்க்கையை திட்டமிட்டு திருப்தியுடன் வாழ்வதையும் தமது மேலதிக கிராமிய சேமிப்புக்களை விளக்குவதையும், இதுதான் உண்மையான ஜனநாயகமென உலகத்திற்கு சொல்லுங்கள்! என வயதான மூதாட்டி கூறுவதையும் சீன கிராமத்திற்குச் சென்ற மேற்கத்தைய தொலைக்காட்சி நிருபர் வெளிப்படுத்தியிருந்தார். நகரங்களில் ஏகாதிபத்தியங்களின் பிரதிநிதிகள் சீன சந்தையைக் கைப்பற்ற மனித உரிமை முகமூடிகளை கழற்றிவிட்டு வர்த்தக பேரங்களுக்கு முகாமிட்டிருப்பது சீனத்தின் மற்றய ஒரு முகம். திரிபுகளின் முகம் அம்மணமாகக் கிழிந்து சீனத்தில் மீண்டும் ஆரம்பிக்கும் வர்க்கப் போர்.

✪ ✪ ✪ ✪ ✪ ✪ ✪ ✪ ✪

# தெய்வீகம் கிரிமினல்மயம்: பாலியல் குற்றங்கள்.

***காவியுடைக் கயவர்கள் அரசியல்வாதிகள் தொழிலதிபர்கள் பொலிஸ் அதிகாரிகள் கூட்டுச்சேர்ந்து இந்நாட்டை பெண்கள் வாழமுடியாத "புண்ணியபூமி" ஆக்கிவிட்டார்கள்.***

பொதுவில் கிரிமினல் குற்றங்கள் பெருகி வருவதைப் போலவே, பெண்களுக்கு எதிரான பாலியல் வன்முறைக் கிரிமினல் குற்றங்கள் அதிகரித்து வருவது நாம் அறிந்ததே. அவை சில தனிநபாகள சம்மந்தப்பட்ட, தனித்தனி சம்பவங்களாக இப்போது நடப்பதில்லை. அமைப்பு ரீதியில் இயங்கக்கூடிய சமூகவிரோத கும்பல்களால் ஏராளமான பெண்களின் வாழ்க்கை சூறையாடப்படுகின்றன. ஒருபுறம், ஏற்கனவே "தெய்வீகம்" என்ற பெயரில் காதக் கூத்துகள் நடத்தும் காவியுடைக் கயவர்களின் "ஆச்சிரமங்கள்". மறுபுறம், பெருகிவரும் சமூகவிரோத கிரிமினல் கும்பல்கள்– மஃபியாக்களின் அட்டூழியங்கள். இரண்டும் அரசியல்வாதிகள், தொழிலதிபர்கள், பொலிஸ் அதிகாரிகளுடன் கூட்டுச்சேர்ந்து இந்தநாட்டையே பெண்கள் வாழமுடியாத "புண்ணிய பூமி" ஆக்கிவிட்டார்கள்.

குஜராத்தில் இரண்டு சாமியார்களும், மராட்டிய மாநிலம் ஜலகானில் ஒரு மஃபியா கும்பலும் பெண்களுக்கெதிரான பாலியல் வன்முறைக் குற்றங்களுக்காக சமீபத்தில் கைதுசெய்யப்பட்டன. அதைத் தொடர்ந்து நாட்டின் பல்வேறு இடங்களிலும் இம்மாதிரியான குற்றங்கள் பெருமளவில் நடப்பது பற்றிய செய்திகள் நாட்டின் பெற்றோர்களையும், பெண்களையும் கதிகலங்கச் செய்துவருகின்றன. முன்பு ஜூனியர் விகடன், தராசு, நக்கீரன், பொலிஸ் செய்தி போன்ற கிசுகிசு ஏடுகளின் வதந்திகள்– பரபரப்புச் செய்திகளாக இருந்த இத்தகைய குற்றங்கள் இப்போது மதிப்புக்குரிய "தேசிய" ஏடுகளின் அதிர்ச்சி, அலறல் செய்திகளாகிவிட்டன.

சில ஆண்டுகளுக்கு முன்பு பீகாரில் இருந்து வீட்டைவிட்டு ஓடிப்போன கமல் சர்மா என்பவன் கேசவானந் என்று பெயரை மாற்றிக்கொண்டான்: காவியுடை அணிந்தான். குஜராத் மாநிலம் துவாரகா நகரில் "சனாதன சேவா மண்டலம்" என்கிற அமைப்பை நிறுவி மதப்பிரசங்கம் செய்தான்: பிறகு ஒரு அனாதை ஆச்சிரமம் நிறுவினான். அனாதை ஆச்சிரமத்தில் சேர்க்கப்பட்ட சிறுமிகள், இளம் பெண்கள் ஊழியர்கள், ஆன்மீக ஆசி–அருள் வழங்குவதாக ஈர்க்கப்பட்ட அப்பாவிப் பெண்கள் என்று தனது காமவெறிக்குப் பலியாக்கினான். இப்படிப்பட்ட 500–க்கும் மேலான பெண்களை மயக்கியும், மிரட்டியும், கற்பழித்தும் கெடுப்பதில் இந்தக் காவியுடைக் கயவனுக்கு ஹேமா சர்மா என்ற பெண்ணே உடந்தையாக இருந்திருக்கிறாள்.

இந்த கேசவானந்தே பல பெண்களைக் கெடுத்ததுமின்றி, அரசியல்வாதிகள், தொழிலதிபர்கள், அரசு அதிகாரிகள் ஆகிய பெரும்புள்ளிகளின் காம வெறிக்கு அவர்களை இரையாக்கினான். இதனால் தனது கிரிமினல் குற்றங்களில் இருந்து தன்னைப் பாதுகாத்துக் கொண்டதோடு, இலவசமாக பலஏக்கர் நிலமும், ஏராளமான சொத்துக்களும் ஆடம்பர வாழ்க்கையும் அமைத்துக் கொண்டு பெரும் செல்வாக்குப் பெற்றான்.

தனது காமவெறிக்கு இணங்கமறுத்த பெண்களைக் கொலையும் செய்தான். பல கருச்சிதைவுகளும் செய்தான். அப்படிக் கருச்சிதைவின்போது ஒரு பெண் இறந்துபோனதால், இந்தக் காவியுடைக் கயவன் கேசவானந்தின் இரகசிய வாழ்க்கை அம்பலமானது. அவன் கைதுசெய்யப்பட்டு நாடுமுழுவதும் பலரது கடும் வெறுப்பு, ஆத்திரத்திற்கு இலக்காகி, அவனுக்காக வாதாட ஒரு வழக்கறிஞரும் முன் வராத நிலை ஏற்பட்டள்ளது. ➲



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஜலகான் பாலியல் குற்றம் தொடர்பாக கைது

டாக்டர்கள்: 1.கமலாகர் சாஸ்திரி, 2.பரமோத் ஜெயின்.



ஆனாலும் அவனது நெருங்கிய கூட்டாளிகளான பெரும்புள்ளிகள் எவரும் கைதாகவில்லை. அவனே இது தனக்கு எதிரான மதப் போட்டியாளர்களின் சதிதான் என்று திமிரோடு பேசி வருகிறான்.

இதைத் தொடர்ந்து அதே குஜராத் மாநிலம் சூரத் நகருக்கு அருகே ஒரு ஆச்சிரமத்தை நடத்திவரும் சுவாமி பகவான்ராம் என்கிற வசந்மோடி என்ற காவியுடைக் கயவனும் இதே குற்றங்களுக்காக கைது செய்யப்பட்டுள்ளான். தான் பகவான் ராமனது அவதாரம் என்றும் தனது பக்தன் லட்சுமனுடைய மனைவி நைனா பட்டேல் தான் உண்மையில் தனதுமனைவி "சீதை" என்று சொல்லி அவளை அறையில் பூட்டிவைத்துத் தகாத முறையில் நடந்துவந்தான். இதனால் ஆத்திரமுற்ற அக்கிராம மக்கள் அவனது ஆச்சிரமத்தைச் சூறையாடித் தீயிட்டுக் கொழுத்தினர். அப்போது அதன் அடித்தளத்தில் இரகசிய அறையும், அதில் ஆபாச-வக்கிர வீடியோ- புகைப்படங்களும், பெண்களது உள்ளாடைகளும், கருத்தடை சாதனங்களும் குவிந்து கிடந்ததைக் கண்டார்கள்.

இதேபோல, டெல்லியின் புறநகர் பகுதியில் காவல் காரணமாக இருந்த ராம்பிரசாத் என்பவன் தான் ஒரு கடவுள் அவதாரம், தாந்ரீகம் தெரிந்தவன் என்று கூறிக்கொண்டு தனது தங்கையுடனே தகாத வாழ்க்கை நடத்துவதோடு, அவள் துணையுடன் 700-க்கும் மேற்பட்ட பெண்களை மயக்கிக் கெடுத்து, கற்பழிப்பு, கருச்சிதைவு, கொலைகளும் செய்திருக்கின்றான். கடைசியாக கடந்தமாதம் ஒன்பது வயது சிறுமியைக் கற்பழித்துக் கொன்று அருகிலுள்ள ஒரு காட்டில் வீசியபோது பிடிபட்டான்.

இதேபோல அசாம் மாநிலம் நல்பாரியில் அனுமானுடைய அருள் பெற்றவன் என்று கூறிக்கொள்ளும் அதுல் சந்திர கோசுவாமி நடத்திவரும் கிருஷ்ணகுரு சேவாசிரமத்தில் ஒரு பெண்ணுடனான தகாத உறவு காரணமாக அவனது கணவன் கொல்லப்பட்டது கடந்த மாதம் அம்பலமானது. தெற்கே திருவண்ணாமலையில் "சாந்திமலை அறக்கட்டளை" எனப்படும் காவியுடைகளின் ஆச்சிரமத்தில் பூசாரியாக இருந்த மவுனசாமியார் என்ற பொன்னுசாமி கடந்தமாதம் மர்மமான முறையில் மாண்டுபோனான். இவன் அருள்வாக்கு தருவதாகக் கூறி பல பெண்களைக் கெடுத்து வருகிறான் இவனோடு சேர்ந்து ஜெர்மன் இளைஞர்களிடம் நமது கிராமத்துப் பெண்களை கூட்டிக் கொடுத்து லட்சம் லட்சமாக சம்பாதித்து அறக்கட்டளை நிர்வாகிகளுடன் ஏற்பட்ட தகராறு காரணமாக இவன் கொல்லப்பட்டிருக்கலாம், அல்லது அவனிடம் அருள் பெறுவதற்காக வந்த பெண்ணிடம் தகாதமுறையில் நடந்து, கணவனால் தாக்கப்பட்டு அம்பலப்பட்டதால் தற்கொலை செய்துகொண்டிருக்கலாம் என்று உள்ளூர் மக்கள் பேசிக் கொள்கின்றனர். அந்த அறக்கட்டளைக் கெதிராக பெண்கள் உட்பட பெருமளவு மக்கள் திரண்டு ஆர்ப்பாட்டம் கூட நடத்தியுள்ளனர்.

**காமவெறியன் பொன்னுசாமியின் அறக்கட்டளைக்கு எதிராக திருவண்ணாமலை பெண்கள் ஆர்ப்பாட்டம்.**



ஜலகான் நகரில் நடந்துள்ள பாலியல் கிரிமினல் குற்றங்கள் வேறுமாதிரியானவை. அந்நகர காங்கிரசு கவுன்சிலர், காங்கிரச சட்டமேலவை உறுப்பினரின் மகன் சிவசேனாவின் உள்ளூர் பிரமுகர் இன்னும் சில "பெரும் புள்ளிகள்"அடங்கிய கிரிமினல் கும்பல் நகரையே குறிப்பாக இளம் பெண்களை பய பீதிக்குள்ளாக்கி வைத்திருந்தது. பல பள்ளி, கல்லூரி பெண்களை காதலிப்பதாக, மணந்து கொள்வதாக ஆசைவார்த்தை காட்டி பல பெண்களைக் கடத்திக் கொண்டுபோய் குளிர்பானத்தில் போதைமருந்து கலந்து கொடுத்து கற்பழித்தனர். அதை வீடியோ, புகைப்படங்கள் எடுத்து பணக்காரவீட்டுப் பெண்களானால் மிரட்டிப் பணம் பறித்தனர். சாதாரண பெண்களானால் அதையே காட்டிக் காட்டி மேலும் மிரட்டி தாமும் கூட்டாளிகளும் சேர்ந்து தமது காமவெறிக்கு இரையாக்கி கொண்டனா. வீடியோ நாடா, புகைப்படங்களை விற்று சம்பாதித்தனர். ➲



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஐந்தாண்டுகளாக இந்தக் கிரிமினல் குற்றங்கள் நடந்து வந்தன. 500–க்கும் மேற்பட்ட பெண்கள் இதற்குப் பலியாகினர். பொலிஸ் உளவுத்துறை எல்லாம் புரட்சியாளர்களை வேட்டையாடத்தான். இப்படிப்பட்ட குற்றவாளிகளைப் பிடிப்பதற்கல்ல! பம்பாய்க் குண்டுவெடிப்பு வழக்கில் கைதான ஒருவன் ஜலகான் குற்றக் கும்பலின் நடவடிக்கைகள் குறித்து உளறிவிட்டதால்தான் "விஷயம்" வெளியே பரவிவிட்டது. பத்திரிகைகள், சமூகசேவை அமைப்புகள், தனிநபர்கள், எதிர்க்கட்சியினர் பெரும் குரல் கொடுத்தபின் சில குற்றவாளிகள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். ஆனாலும் குற்றங்கள் அளவு, தன்மையைக் குறைத்துப் பதிவு செய்து குற்றவாளிகளைத் தப்புவிப்பதில் பொலிஸ் உடந்தையாகவே உள்ளது. "சமூக இழிவு" கருதி குற்றம் சுமத்தவும், சாட்சிசொல்லவும் பாதிக்கப்பட்ட பெண்கள் முன் வர மறுக்கின்றனர். இதுவும் குற்றவாளிகளுக்குச் சாதகமாகிவிட்டது. அதிகாரத்திலுள்ள "பெரும் புள்ளி"களுடன் நெருங்கிய தொடர்பு இருப்பதோடு அவர்களை மிரட்டித் தப்பிக் கொள்வதற்கான சில ஆதாரங்களும் இக் குற்றவாளிகளிடம் உள்ளன.



கிரிமினல் சாமியார் ராம்பிரசாத்

கேசவானந்த்.

கடந்த ஓரிரு மாதங்களில் அம்பலமானவைதாம் இந்த விவகாரங்கள் என்றாலும் இப்படிப்பட்ட கிரிமினல் குற்றங்கள் நமது நாட்டில் எங்கும் வேரூன்றிப் போயுள்ளன. ஜலகான் ம∴பியா கும்பலைப் போலவே அஜ்மீர் நகரில் பாலியல் கிரிமினல் குற்றங்கள் நடந்த விவகாரம் ஓராண்டுக்கு முன்பு இராஜஸ்தானைக் குலுக்கியது. சென்னையில் நடிகர் சுமனும் ஒரு வீடியோக் கடைக்காரனும் இப்படிச் செய்ததாக சில ஆண்டுகளுக்கு முன்பு பிடிபட்டனர். கேரளத்தில் இப்படிப் பரவலாக நடப்பதாக பத்திரிகைச் செய்திகள் வெளிவருகின்றன. காவியுடைக் கயவாளிகள் நடத்தும் ஆச்சிரமங்கள் அனைத்துமே பாலியல் வன்முறைக் குற்றங்களின் ஊற்று மூலங்களாகவே உள்ளன.

நாட்டின் பிரதமர், அரசுத்தலைவர் உட்பட உயர்பதவியிலுள்ள பலரின் "ஆன்மீக குரு"வான சாயிபாவா ஆச்சிரமத்தில் பெண் விவகாரமாகவே பொலிஸ் தலையிட்டு நாலு இளைஞர்களைச் சுட்டுக் கொன்றது என்று அரசுத்தலைவர் சர்மாவே ஒப்புக் கொண்டார். இன்னும் சுடாச்சாரி, தேவேந்திர பிரமச்சாரி, ரஜனிஷ் போன்றவர்களின் ஆச்சிரமங்கள் காமவெறியாட்ட மடங்களாகவே இருந்தன.

தமிழ்நாட்டிலும், முத்தக் காமாட்சி மேல்மருவத்தூர் பங்காரு போன்ற திடீர் "சாமியார்கள்" முதற் கொண்டு ஆதீனங்கள், மாடாதிபதிகள், அனைவரின் நடவடிக்கைகளுமே மர்மமாகவே உள்ளன. இவையெல்லாம் ஏதோ விதிவிலக்கான சிலரது கிரிமினல், வக்கிரப் புத்தியினால் நடப்பவை அல்ல. சாமியார்கள், ம∴பியா ரவுடிகள் கடுமையாகத் தண்டிக்கப்பட வேண்டிய குற்றவாளிகளாக இருக்கும்போது, அவர்கள் இந்தளவு ஆதிக்கம் பெற்றிருப்பதற்கான சமூகக் காரணங்களும் உள்ளன. அதிகாரப் பலமும், பணபலமும் பெற்றுள்ள "பெரும் புள்ளி"களின் பின்பலமும் இக்குற்றவாளிகளுக்கு இருக்கின்றது. அத்தோடு இவர்களின் குற்றங்களுக்கு கணிசமான அளவு பெண்கள் தாமே முன்வந்து, இசைந்து பலியாகியிருக்கின்றனர். தெய்வீகம், மதபோதனை, தாந்திரீகம் போன்ற மூடநம்பிக்கை ஒருபுறம்; ஜலகான் விவகாரத்தில் ஏராளமான பெண்கள் பலியானதால் அந்நகரப் பெண்கள் அனைவருமே கெட்டுப்போனவர்கள் என்று கருதி அங்கிருந்து மணமுடிக்கவே மறுப்பதும், கற்பிழந்தவர்கள் என்று இழிவுபடுத்திப் புறக்கணிப்பதும் மறுபுறம். இரண்டு வகையிலும் பிற்போக்கின் ஆதிக்கத்துக்கு பெண்கள் இரையாகியுள்ளனர். ஜலகான் விவகாரத்தில் ஆடம்பர ஆபாச–ஒழுக்கக்கேடு நிறைந்த பண்பாட்டின் செல்வாக்குக்கு இரையாகியுள்ளனர். ஆக குற்றவாளிகளைத் தண்டிப்பது மட்டும் போதாது: அதற்கு அடிப்படையான இச் சமூக பண்பாட்டு இழிவுகளையும் துடைத்திட வேண்டும்.

நன்றி: புதிய காலாச்சாரம்.

**இந்திய புரட்சிகர ஒடியோ சிலவற்றை விற்பனைக்காக உங்கள் முன் சமர் அறிமுகம் செய்கின்றது.**

ஏகாதிபத்திய எதிர்ப்புப்பாடல்கள், மோசடித்தேர்தல்கள் டங்கல் எதிர்ப்புப் பாடல்கள் மற்றும் ஜெயலலிதாவின் பாசிசத்துக்கு எதிரான பாடல்கள், சாதி சமூக ஒடுக்குமுறைகளுக்கு எதிரான பாடல்கள் எனப் பல வகைப் பாடல்களைக் கொண்டுள்ளது.

❶தேர்தல் வந்து தீர்த்தது என்ன? ❷இருண்ட காலம் ❸அசுர கானம் ❹அடிமைச் சாசனம்

ஆகிய நான்கு ம. க. இ. க இனரின் ஒலிப்பேழைகளைப் பெற்றுக்கொள்ள விரும்புவோர் 100 பிராங்குகளை எமக்கு அனுப்பி வையுங்கள். தனி ஒரு ஒலிப்பேழையைப் 25 பிராங்குகள் அனுப்பியும் பெறலாம். சமர். ஆ.கு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# தொடரும் துரோகமும், கைக்கூலித்தனமும்

பாலஸ்தீன போராட்டத்தின் நீண்டபல தியாகங்களும் அதன் தொடர்ச்சியுடன் பாலஸ்தீன துரோக ஒப்பந்தம் உருவானது. இவ் ஒப்பந்தம் கையெழுத்தான காலகட்டத்தில் நாம் 'சமரில்' மிகச்சரியாக இத் துரோகத்தைச் சுட்டிக் காட்டியிருந்தோம்.

இஸ்ரேலிய பொலிஸாக இஸ்ரேலிய இராணுவம் செய்ததைத் தொடர அரபாத் விசுவாசம் தெரிவித்ததை சமர் 10ல் கூறியிருந்தோம்.

இவ் ஒப்பந்த மை காயமுன்பே அரபாத் இஸ்ரேலிய இராணுவத்தைவிட அடக்கு முறையில் சிறந்தவர்கள் என்பதை நிரூபிக்க மக்கள் கூட்டம் மீது துப்பாக்கிக் குண்டுகளை ஈவிரக்கமின்றி பொழிந்து தள்ளினர். 15க்கு மேற்பட்டோரை கொன்றும், 200க்கு மேற்பட்டோரை காயப்படுத்திய இந்த ஒருதாக்குதலே, உலகில் முதல்தரமான துரோகத்தை வெளிச்சமிட்டுக்காட்டப் போதுமானது.

பாலஸ்தின போராட்டத்தில் அரபாத் குழு எப்போதும் சமரசவாதியாகவும், சந்தர்ப்பவாதியாகவும் ஆயுதப்போராட்டம் நடந்தகாலத்தில் தன்னை இனம் காட்டியவர்கள். இதை இனம்கண்ட ஏகாதிபத்தியங்களும், இஸ்ரேலும், அரபு மன்னர்களும்,
சேக்குகளும், பாலஸ்தின போராட்டத்தைச் சிதைக்க அரபாத்தை வளர்க்கத்தொடங்கினர். நிதியுதவி, ஆயுத உதவி செய்ததுடன்
பாலஸ்தின போராட்டத்தின் தலைமைக்கு அரபாத்தை உயர்த்துவதில் இவர்கள் மிகக்கவனமாகவே செயற்பட்டனர். பாலஸ்தினபோராட்டத்தை சிதைக்கவும், எதிர்ப்பவர்களை அடக்கவும் பாலஸ்தினத்தில் ஒருவரை உருவாக்கிய கையுடன் ஒப்பந்தம் கையெழுத்தானதுடன் அரபாத் தனது ஏகாதிபத்திய விசுவாஷத்தை பறைசாற்றினார். இதை அங்கீகரித்த நோபல் குழு சமாதானபரிசு வழங்கி சர்வதேச அங்கீகாரத்தை வழங்கினர். ஒப்பந்தம் கையெழுத்தானது முதல் மக்கள் தொடர்ச்சியாக போராடிவந்தனர். இதை அடக்கும்படி இஸ்ரேல் விடுத்தவேண்டுகோளை அரபாத் சிரமேற்கொண்டு மக்கள்கூட்டம் மீது கண்மூடித்தனமான துப்பாக்கி வேட்டுக்களாகத் தீர்த்தனர். மக்களை ஏமாற்ற அரபுஉடையில் திரியும் அரபாத், இடுப்பைவிட்டகலாத கைத்துப்பாக்கியுடன் தன்னை பாலஸ்தின மீட்பனாக காட்டித்திரிந்தவொரு ஏகாதிபத்திய தரகனாகும். இஸ்ரேலிய இராணுவம்கூட போராடிய மக்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்யமுடியாது, மேல்வெடிகளை வைத்தவண்ணம் நீண்டகாலம் அல்லல்பட்ட நிலையில், பாலஸ்தின பொலிஸ் முதல்தரத்திலேயே மக்கள்மீது குண்டுகளை அறைந்தனர்.

பாலஸ்தின பொலிஸை உருவாக்க பொறுப்பாக இருந்த அபுல்ஹனி முன்னாள் இஸ்ரேலிய உளவாளியாக செயற்பட்டவரே. பாலஸ்தின பாதுகாப்புப் பொறுப்பாளர் அரிவ் யெய்சோ பாரிஸில் வைத்து படுகொலைசெய்யப்பட்டதற்கும் இவருக்கும் சம்மந்தம் இருந்ததை அக்கொலையின் விசாரணைகள் வெளிப்படுத்தியுள்ளன. இந்த உளவாளிகளின் தலைமையிலான பொலிஸ்சும், பாலஸ்தின துரோகி அரபாத்தின் அரசும் பாலஸ்தின போராட்டத்தை அழிக்க கங்கணம் கட்டியுள்ளது. ஆனால் போராட்டமென்பது மக்களின் சொத்து. வரலாறு மக்களுடையதாகவே இருக்கும். போராட்டத்தை யாராலும் அழிக்கவோ, தடுக்கவோ முடியாது. சிலதடைகளை பின்னடைவுகளை மட்டுமே செய்யமுடியும்.

இலங்கையில் இலங்கை–இந்திய ஒப்பந்தத்துடன் EPRLF இன் துரோகத்தனமும், அதனுடன் கூட்டுச்சேர்ந்த PLOT, ENDLF, EROS, TELO, TULF என்பன மக்களை அடக்கி தமது துரோகத்தை, கைக்கூலித்தனத்தை வெளிப்படுத்தினர். இதைநாம் அனுபவரீதியாக கண்டதுடன் அத்துரோகிகளை மக்கள் வெறுத்தனர்.
இத்துரோகிகள், ஒப்பந்தத்தோல்வியைத் தொடர்ந்து இலங்கையரசுடன் கூடிக்குலாவி வருகின்றனர். இயன்றவரை விடுதலைப்போராட்டத்தைச் சிதைத்துவிட முயன்று வருகின்றனர்.
இன்று சந்திரிகா அரசுடன்–புலிகள் சுயநிர்ணய (பிரிந்துபோதலுடன் கூடிய) அடிப்படையில் அல்லாத எந்தவித ஒப்பந்தம் செய்யினும் அது துரோகத்தைக் கொண்டதாவே அமையும். அப்படிப்பட்ட ஒரு ஒப்பந்தத்தைச் செய்யின் மக்களின் போராட்டத்தை அடக்க அரபாத்போல் சம்மதித்து செயற்பூர்வமாக செய்துகாட்ட முனைவர்..

---

வர்க்க சமரச நடைமுறை, சோசலிசப் புரட்சிக்கருத்தையும் புரட்சிகர போராட்ட வழிமுறைகளையும் விலக்குதல், முதலாளித்துவ தேசியவாதத்தை தழுவுதல்: தேசிய இனம், நாட்டினம் என்பனவற்றின் எல்லைக்கோடுகள் வரலாற்றில் தற்காலிகமானவையே என்ற உண்மைகளைப் பாராமல் விடுவது, முதலாளிய சட்டவியலை வழி படுவது, பரந்துபட்ட பொதுமக்கள் (அதாவது குட்டி பூர்சுவாக் கள்) ஒதுங்கி விடுவார்களோ என்ற அச்சத்தில் வர்க்க நிலைப் பாட்டையும், வர்க்கப் போராட்டத்தையம் துறப்பது – சந்தேகத்திற்கிட மின்றி சந்தர்ப்பவாதத்தின் அடிப்படையாகும் (லெனின் – vol.7,p48

www.tamilarangam.net

## நாங்கள் வாழ விரும்புகின்றோம்!



நெதர்லாந்தைச் சேர்ந்த பெண் சிற்பி ரூத் வாடர்மேன். போபால் விஷவாயுப் படுகொலை நடந்தபோது கல்கத்தாவில் இருந்தார் ரூத். செய்தி அவரை உலுக்கியது. "இதற்குக் காரணம் மேற்கத்திய சமுதாயம். இதில் எனக்கும் சம்மந்தம் உண்டு. அதற்கு ஒன்றும் செய்யாமல் சும்மா இருந்தால் குற்றம் புரிந்தவளாவேன்" என்று அறிவித்த ரூத், மனிதன் என்ற முறையில் தான் செய்யவேண்டிய முதல் வேலைகளைச் செய்யத் தொடங்கினார்.

போபாலில் பாதிக்கப்பட்ட குழந்தைகள் மத்தியில் சென்று சமூக ஊழியம் செய்தார். போபால் கொலை பற்றிய உண்மைச் செய்திகளை ஒளிவு மறைவில்லாமல் உலகெங்குமுள்ள பத்திரிகைகளில் எழுதினார். அப்போது மம்தா என்ற குழந்தையின் கதையைக் கேள்விப்பட்டார். அவள் தாய் குழந்தையைக் காப்பாற்றத் தப்பி ஓடும்போதே மூச்சுத்திணறி உயிரிழந்தாள்: மம்தா எப்படியோ தப்பிவிட்டாள். ரூத் மம்தாவாக தன்னை எண்ணிப்பார்த்துக் கொண்டார்.

ரூத்தின் வாழ்க்கையும் அதுவேதான். ஆம்ஸ்டர்டாம் நகரைச்சேர்ந்த யூத குடும்பத்தில் பிறந்தவர். கொலைகாரன் ஹிட்லர் அவரது தாயை விஷவாயு அறையில் தள்ளிக் கொன்றுவிட்டான். பிறகு நாடோடியாகவே சுற்றிய ரூத் கடைசியில் நெதர்லாந்துக்கு வந்து சிற்பம் கற்றுப் பிரபலமானார்.

இந்தியாவிலிருந்து திரும்பிய ரூத்தின் மனது அமைதியின்றித் தவித்தது. மெல்ல மெல்ல அவர் மனதிலேயே மம்தாவைத் தாங்கியோடும் தாயின் சிற்பத்தைச் செதுக்கத் தொடங்கினார். போபாலிலேயே அச்சிற்பத்தை நிறுவிவிட வேண்டுமென்று துடித்தார்.

செலவுக்கு முதலாளிகளிடம் பிச்சைக்கு நிற்கவில்லை: உலகெங்குமுள்ள கலைஞர்கள், நண்பர்களுக்கு எழுதி கொஞ்சம் கொஞ்சமாகக் காசு சேர்த்தார். இந்தியாவுக்கு வர விண்ணப்பித்தார். இந்தியத் தூதரகம் விசாதராமல் தடுப்புகள் போட்டது. "எங்கள் கலைப் பொக்கிஷங்களான தாஜ்மகால், அஜந்தா, கஜிராகோவிற்குப் போங்களேன், ஏன் விபத்து நடந்த இடத்துக்கெல்லாம் போகிறீர்கள்? எதற்கு வீண் வம்பெல்லாம்" ரூத் விடவில்லை: வாதாடினார்: "ஒரு கலைஞன் என்ற முறையில் போபாலில் நடந்தது என்னைப் பாதித்தது. அந்த உணர்ச்சியை, எதிர்வினையை நான் தெரிவிக்க வேண்டும். இப்படிப்பட்ட கோரக் கொலைகள்தான் மனித சமூகத்தையே அழித்து விடுகின்றன. இதற்கெதிராகப் பிறந்தவைகள்தான் உலகின் அற்புதக் கலைப்படைப்புகள்."

கடைசியாக அனுமதிக்கப்பட்டார். போபாலுக்கு சிலையைக் கொண்டு சென்றபோது, ஆயிரக்கணக்கில் மக்கள் திரண்டார்கள். "அங்கிருந்த மக்களே தங்கள் கையால் வார்ப்பை உடைத்து சிலையை வெளியே எடுத்தாகள். அது அவர்களின் சிற்பமாகிவிட்டது."– ரூத் உணர்ச்சி வசப்பட்டு சம்பவத்தை விபரித்தார்.

சமூகக் கண்ணோட்டமும் அக்கறையும் கொண்ட எந்தவொரு கலைஞனும் முதலில் அவர் ஒரு மனிதராவும், பிறகுதான் கலைஞனாகவும் நடந்து கொள்ள வேண்டும். அந்தவகையில் ரூத் சிலைவடிக்கும் முன்பும் சமூக ஊழியம் செய்தார்: வடித்த பிறகும் அந்தப்பெருமை மயக்கத்தில், போதையில் பொழுது போக்கவில்லை: போபாவில் அனாதைகளாக விடப்பட்ட குழந்தைகளுக்கு சர்வதேச அளவில் நிவாரணம் பெற்றுத்தர இன்னமும் உழைக்கின்றார்: தான் சிற்பி மட்டுமே என்று எல்லைபோட்டுக் கொள்ளாமல், நிலைமைகோரும் தேவைக்கேற்ப அவர் இப்போது ஆலை விபத்துகள், மற்றும் மனித உரிமைகள் சம்மந்தமான சர்வதேச விசாரணைக் கமிட்டி' போபாலில் நடத்திவரும் விசாரணையை நெதர்லாந்து பத்திரிகைகளில் வெளியிடுவதற்காக நிருபர் வேலை செய்கிறார்.



ரூத்.

மாடன் ஆர்ட் என்ற போர்வையில் போபாலிலேயே உள்ள பாரத்பவன் ஓவியர்கள், சிற்பிகள், ➲



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சென்னை–பெங்களூர்–பம்பாய்–டெல்லி களாமேலாக்களில் பங்கேற்ற பெரும்பாலான கலைஞர்கள் தங்களது பாலியல் அரிப்புக்களையும், கோரமான மனவக்கிரங்களையும் துளிகூட வெட்கமில்லாமல் காட்சிக்கு வைத்து வயிறு வளர்கிறார்கள். அயோத்தி மசூதி இடிப்புக்குப் பிறகும் இவர்களில் அனேகம் பேருக்குச் சொரணை இல்லை. அவர்களோடு ஒப்பிடுகையில் ரூத் வாடர்மேன் மானமிக்க துணிச்சலுள்ள மனிதாபிமானி!

ரூத் செதுக்கியுள்ள அச்சிலையின் அடிப்பீடத்தில் பொறித்துள்ள எழுச்சி மிக்க சொற்கள் இவை: "ஹிரோஷிமாவை, போபாலை மறுபடி நடக்க அனுமதிக்க மாட்டோம்! நாங்கள் வாழ விரும்புகின்றோம்!"

புதிய கலாச்சாரம்.

## பிரேமானந்தா சாமியல்ல! ஒரு காமுகன், கொலைகாரன், கொள்ளைக்காரன்.



எங்கள் நாட்டில் மாத்தறையைப் பிறப்பிடமாகக் கொண்ட காவியுடைச் சாமி பிரேமானந்தா மகாராஜா 125–நாடுகளில் தனது ஆச்சிரமங்களை வைத்திருந்தான்.

சத்திய சாயிபாபாவின் சீடனெனத் தொடங்கிய இவனது பித்தலாட்டங்கள், இறுதியில் இவன் தன்னைத்தானே ஒரு சாமியாக மாற்றிக் கொள்ளும் அளவிற்கு வளர்ந்தது. விபூதி, லிங்கம், தங்கச் சங்கிலி, பூ, என்பவற்றை வரவழைத்துப் பேய்க்காட்டி அருள் பெற்ற சாமியென்று தன்னை அறிவித்தான்.

இதில் மயங்கிய மேட்டுக்குடி, மத்தியதரப் பெண்கள் இவனது இரைக்கு உள்ளானார்கள். யாழ்ப்பாணத்தில் சுண்ணாகத்தில் காங்கேசன்துறை வீதியில் ஒரு பெரிய நாற்சார் வீட்டில் தனது ஆச்சிரமத்தைத் தொடங்கினான். 'பூபாலசிங்கம் ஆச்சிரமம்' எனப் பெயரிட்டுத் தொடங்கிய இவ் ஆச்சிரமத்தில் வசதியான பெண்கள், மற்றும் மிகவசதியான ஆண்களுக்கு மட்டுமே ஆச்சிரமத்துக்குள் செல்ல அனுமதியுண்டு. இனக்கலவரம் மற்றும் இயக்கங்களின் ஆதிக்கத்துடன் தனது ஏமாற்றலைத் தொடர இந்தியாவே தகுந்த வாய்ப்பான இடம் எனக் கண்ட பிரேமானந்தா, அங்கு தனது ஆச்சிரமத்தைத் தொடங்கினான். அத்துடன் 125 நாடுகளுக்கு தனது கிளைகளை விரிவுபடுத்தினான். ஆச்சிரமங்களில் பெண்களைத் தங்கவைத்து கல்வி புகட்டுவதாகக் கூறி பெண்கள் விடுதியைத் திறந்தான். இந்தியா, தமிழ்நாட்டு அரசு ஆதரவுடன் அவர்களுக்கும் ஆசி வழங்கியபடி தனது மன்மத லீலைகளை தொடர்ந்தான்.

அங்கு தங்கி கல்விகற்ற பெண்களின் மாதவிலக்கு நாட்களைக் கூட அட்டவனையிட்டு தனது டயரியில் குறித்து வைத்துக் கொண்டு பெண்களை மிரட்டிக் கற்பழித்தான். மறுத்தவர்களைத் தண்டித்து தனக்குக் கீழ்படியச் செய்தான். அம்பலமாகும் போதும், எதிர்க்கும் போதும் படுகொலை செய்து உண்மைகளை மறைத்தான்.



மக்கள் தமது இயலாமையில் கடவுள் மீது பாரத்தைப் போட்டு வழிபடும் அப்பாவித்தனங்களைப் பயன்படுத்தி, இவன்போன்ற காவியுடைச் சாமிகள் மக்களின் பக்தி வெள்ளத்தை தமக்குச் சாதகமாக பயன்படுத்தி அவர்களைக் குதறி வருவது இது முதல் சம்பவம் அல்ல.

சத்திய சாயிபாபாவின் ஆச்சிரமத்தில் அண்மையில் 4–இளைஞர்கள் கொல்லப்பட்டதும் பெண் சம்மந்தப்பட்ட கொலையே என இந்திய அரசே ஒத்துக்கொள்ள வேண்டி ஏற்பட்டுள்ளது. இதே சத்திய சாயிபாபாவை வீடியோ எடுத்த இந்தியத் தொலைத் தொடர்பு நிருபர், அதை மிகக் குறைந்த வேகத்தில் ஓடவிட்ட பொழுது சத்திய சாயிபாபாவின் அற்புதங்கள் அனைத்துமே பொய்யெனக் கண்டுபிடித்தார். வெளியில் இருந்து ஒருவர் கொடுப்பது வீடியோவில் தெளிவாகவே தெரிந்தது. இதை ஒலி,ஒளி பரப்ப தொலைக்காட்சி நிறுவனம் மறுத்ததாம். இதன் பின்னணியில் இந்திய அரசு இருந்தது அம்பலப்பட்டது. இதுபோன்ற ஆசாமிகளை அரசியல்வாதிகளே உயிர் கொடுத்து பாதுகாத்து வளர்த்து எடுக்கின்றனர். மக்களைத் திசைதிருப்பி தமது பகல் கொள்ளைகளைத் தொடர இது வசதியாகவே அமைந்து விடுகிறது.

பிரேமானந்தா சுவாமியின் அருள்களை இலங்கையில் பல மந்திரிகளும், அவர்களின் மனைவிமாரும் பெற்றுக்கொள்ள படையெடுத்தனர். ➲



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எதை எதைப் பெற்றனரோ— அவர்களுக்கே வெளிச்சம். தொண்டமான் சொந்த மண்ணில் தொடங்கிய உறவை தமிழ்நாட்டிலும் தொடர்ந்தார். இந்தியா வரும் ஒவ்வொரு முறையும் பிரேமானந்தா சுவாமியிடம் அருள் வாங்கிச் செல்கின்றார், தொண்டா.

பல லட்சம் பெறுமதியான சொத்துகளுடன் பல நூறு பெண்களைக் கற்பழித்து, சில பத்துக் கொலைகளுடன் இந்தப் போலிச் சாமி பிரேமனந்தா இன்று கையும் களவுமாக மாட்டிவிட்டார். மவுன சாமிகளின் மன்மதவேஷம் இன்று காற்றில் பறக்கிறது.

பிரான்சில் சத்திய சாயிபாபாவின் கிளையை தமிழர்கள் நடத்துவது ஏன்தானோ? சாயிபாபாவின் பெண் வெறியாட்டங்கள்: நான்கு கொலைகளுடன் அம்பலமாகியும், போலிப் பித்தலாட்டங்களும், கன்னிப் பூசைகளும் அம்பலமாகியும் இவர்களுக்கு சூடு சொரணையே வரவில்லையா? இவர்கள் பித்தலாட்டக்காரர்கள், காமுகர்கள், கொலையாளிகள். எல்லாச் சாமிகளும் பசுத்தோல் போர்த்த புலிகளே! இவர்கள் தண்டிக்கப்பட வேண்டிய குற்றவாளிகள் மட்டுமல்ல: இவர்கள் மாபெரும் சமூக விரோதிகள்.

---

# ஏகாதிபத்திய சூறையாடலின் **இரத்த சாட்சி:** 'பெரு'

> அதிசயக்கத்தக்க அளவில் இயற்கை வளங்களையும், கனிப்பொருள் வளங்களையும் தன்னகத்தே குவித்துவைத்துள்ள லத்தீன் அமெரிக்கநாடான பெரு ஏகாதிபத்தியங்களது சூறையாடலுக்கு இரத்த சாட்சியாக இன்று காட்சியளிக்கின்றது.

உலகில் வெள்ளி, நாகம் என்பன அதிகளவில் பெறப்படும் நாடுகளில் இரண்டாவதாக பெரு உள்ளது. பெருவினது காரீய உற்பத்தி உலகஉற்பத்தியில் முறையே நான்காமிடத்திலும் செம்பு உற்பத்தி ஐந்தாவது இடத்தையும் வகிக்கின்றது. தங்கம் அதிகளவுகொண்டுள்ள நாடுகளில் ஒன்றாகவும் மிகப்பெருமளவு எண்ணெய் வளம் கொண்டுள்ளதாகவும் பெரு நாடு விளங்குகின்றது. இத்தகையதான இயற்கைவளம் கொண்டுள்ள பெரு நாட்டினது வெளிநாட்டுக் கடன்தொகை 23 பில்லியன் டாலர்களுக்குமதிகமாக உள்ளது. 2000ம் ஆண்டளவில் பெருவினது வெளிநாட்டுக் கடன்தொகை 50 பில்லியன் டாலர்களை எட்டிவிடுமென நிதித்துறை ஆய்வாளர்கள் மதிப்பிடுகின்றனர்.

1994ம் ஆண்டின் பெருவினது மொத்த பட்ஜெட் ஆன 6 பில்லியன் டாலர்களில் 20% வெளிநாட்டுக் கடன்களினது வட்டியை அடைப்பதற்கு ஒதுக்கப்பட்டபோதும் அது போதுமானதாக இல்லாதுள்ளது. வட்டியை அடைப்பதற்கு மேலதிகமாக வெளிநாட்டுக் கடன்களைப் பெற பெரு அரசு உத்தேசித்துள்ளது. இவ்வாண்டில் மட்டும் பெரு செலுத்தவேண்டிய கடன்களுக்கான வட்டி மதிப்பு மட்டும் 3- பில்லியன் டாலர்களாகும். 1986ல் சர்வதேசிய நாணய நிதியம் (IMF) பெரு நாட்டிற்கான எல்லாக் கடன்களையும் ரத்துச் செய்திருந்தது. 1990ல் பிஜிமோரி அரசு பதவிக்கு வந்தபின் IMF உடன் உடன்படிக்கைகளைச் செய்துகொண்டது. அதன்படி கடன் பெறுவதற்காக IMF கட்டளைப்படி பெருவின் பொருளாதாரம் ஏகாதிபத்தியங்களின் சூறையாடலுக்கேற்ப மாற்றப்பட்டது. ஒரு ஆண்டிற்குள்ளே தொழிலாளர்களின் ஆகக்குறைந்த சம்பள நிர்ணயம் 52% ஆல் வீழ்ச்சியடைந்தது. பெரு மக்களில் 1 கோடியே 30–லட்சம் பேர் மாதவருமானமாக 15.50 டொலரோ அதற்கு குறைவான தொகையோதான் பெறுகின்றார்கள். முழுநேர வேலைக்கு சராசரியாக 50 டொலரே மாத வேதனமாக உள்ளது. பிஜிமோரி அரசு பதவிக்கு வந்தபோது 54% பெரு மக்கள் தமது அடிப்படைத் தேவைகளை பூர்த்திசெய்யக்கூடிய நிலையிலிருந்தார்கள். ஒரு வருடத்தின் பின் 5% மக்களே தமது அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்யக்கூடியவர்களாக உள்ளனர். மக்களினது வருமானம் மிகக் குறைந்ததாக உள்ளபோதே பொருட்களது விலை கிட்டத்தட்ட அமெரிக்காவினது பொருட்களது விலைக்கு அண்மித்ததாகவுள்ளது.

பிஜிமோரி அரசு பதவிக்கு வந்தபின் உலகவங்கியிடமிருந்து 45–மில்லியன் டொலர் கடன்பெற்று வெளிநாட்டக் கடன்களுக்கான வட்டியை செலுத்த ஆரம்பித்தது. இத்தொகை பெரு அறவிடும் மொத்த வரியினது 1/6 பங்கு ஆகும். 1993ல் ஜப்பானும், அமெரிக்காவும் 930 மில்லியன் டொலர்களை கடனாக பெரு அரசுக்குக் கொடுத்தது. IMF இனது கடன்களுக்கான வட்டியைச் செலுத்துவதற்கு அளித்திருந்தது. இதன் பின்பாக IMF பெரு அரசுக்கு கடன் வழங்க சம்மதித்தது. IMF இனது கடன் பெறுவதற்காக பெரு அரசு IMF இனது கட்டளைகளையும் பெருவின் பொருளாதாரம் மீது IMF ஆதிக்கம் செலுத்துவதையும் ஏற்றுள்ளது. மிகவறுமை நிலையிலுள்ள பெருமக்களினது ➲



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சமூகநலத் திட்டங்களுக்கு 450 மில்லியன் டாலர் மட்டுமே செலவிட முடியுமென உத்தரவிடும் நேரத்தில் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் பெருவை சூறையாடி வெளியில் எடுத்துச் செல்வதற்கு வசதியாக 9 பில்லியன் டாலர்கள் வீதிப்புனரமைப்பிற்காக ஒதுக்கப்பட்டுள்ளது. வெளிநாட்டு வர்த்தக வங்கிகளுக்கு வட்டியாக செலுத்தும் தொகையோ 550 மில்லியன் டொலர்களாகும். வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்காக வீதிகள் அமைக்கப்படும்போது எவ்வித வாகன வசதியும் கொண்டிராத பெருவிய மக்கள் தமது உற்பத்திப் பொருட்கள், விவசாய விளைபொருட்களை சந்தைக்கு எடுத்துச் செல்ல எவ்வித வசதியுமற்றவர்களாகவே உள்ளனர்.

வெளிநாட்டுக் கடன்களை அடைப்பதற்கும் IMF இனது கட்டளைப்படியும் பெரு அரசு தனது நாட்டு எல்லா வளங்களையும், அரசுடமையான கம்பனிகளையும் அந்நிய நாட்டவருக்கு விற்று வருகிறது. அரசு கம்பனிகள் மட்டுமல்லாது கனிப்பொருள் சுரங்கங்களையும் எண்ணெய் வளங்கள் மீதான உரிமையைக் கூட ஏகாதிபத்தி நிறுவனங்களுக்கு விற்றுக்கொண்டுள்ளது. பெரு நாட்டின் மீன்பிளத்துறை, விமானசேவை, தொலைத்தொடர்புகள் கூட இன்று அந்நிய கம்பனிகளுக்கு விற்கப்பட்டுள்ளது.

பெருநாட்டின் வளமான 20 மில்லியன் ஏக்கர் நிலம் அந்நிய முதலீட்டாளர்கள் தமக்குத் தேவையானவற்றை பயிரிட்டு எடுத்துச் செல்வதற்காக வழங்கப்பட்டுள்ளது. நீரின்மீதான உரிமைகூட அந்நியருக்கு விற்கப்பட்டுள்ளது. வெளிநாட்டு முதலீட்டாளர்களைக் கவர பிஜிமோரி அரசு பலவகையான சலுகைகளை அறிவித்துள்ளது. முதலீடுகள் மீதான பல கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டு வெளியார் பெறும் இலாபம் மீதான வரிகள் குறைக்கப்பட்டோ, வரிவிலக்கு அளிக்கப்பட்டோ புதிய சட்டங்களை அமுல் படுத்தியுள்ளது.

அந்நிய எண்ணெய் கம்பனிகள் தாம் விரும்பிய வழியில் எண்ணெயைப் பிரித்தெடுக்கவும் வரி எதுவும் செலுத்தாமல் எண்ணெயை வெளியில் எடுத்துச் செல்லவும் அனுமதிக்கப்பட்டுள்ளது. சுற்றச்சூழல் பாதுகாப்பு விதிமுறைகளும் வெகுவாகத் தளர்த்தப்பட்டுள்ளது. வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு வரிவிலக்கு அளிக்கப்படும்போது பெருவினது மக்களது உற்பத்திகள் மீதான மொத்த வருமான வரியை அதிகரிக்கும்படி IMF கட்டளையிட்டுள்ளது. பிஜிமோரி பதவிக்கு வந்தபோது மொத்த உள்நாட்டு உற்பத்திவரி 4.4% ஆக இருந்தது. பிஜிமோரி அரசு வரியை 9.5% ஆக அதிகரித்தது. இவ்வரி அதிகரிப்பு தொழிலாளர்களது உண்மையான வருமானத்தில் வீழ்ச்சியை ஏற்படுத்தியது. இப்போது கடன்பெற வேண்டுமெனின் உள்நாட்டு வரியை 13% ஆக அதிகரிக்கும்படி IMF கட்டளையிட்டுள்ளது. வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கும் அவாகளது கூட்டாளிகளான பெருவிய தரகுமுதலாளிகளுக்கும் வரிநீக்கமளிக்கின்ற ஏகாதிபத்திய அடிவருடியான பெரு அரசு பெருவின் வறியமக்கள் மீதே வரிச்சுமையை ஏற்றிவருகிறது. ஏற்கனவெ அதிகரித்த வரிச்சுமையால் துயருறும் பெரு மக்கள் புதிய வரியேற்றத்தாலும் உணவுப் பொருட்களின் விலையேற்றத்தாலும் மற்றும் அத்தியாவசிய பண்டங்களின் விலையேற்றத்தாலும் பெரிதும் பாதிப்படைந்துள்ளனர்.

பெருவின் 30 அரசுடமையான கம்பனிகள் குறைந்த மதிப்பீட்டு விலைக்கே விற்கப்பட்டுள்ளன. பெருவின் எல்லா அரசுக் கம்பனிகளை உயர்ந்த மதிப்பீட்டு விலைக்கே விற்றாலும் வெளிநாட்டுக் கடன்களது 2-வருட வட்டியை அடைப்பதற்கு கூட அது போதுமானதாக இல்லை. அத்துடன் பெருவினது விலைமதிப்பில்லாத வளங்கள் யாவும் அந்நியர்க்கு தாரைவார்க்கப்பட்டுவிடும். கம்பனிகளை விலைக்கு வாங்கும் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் செலவீனங்களைக் குறைக்கும் ஒரேவழியாக தொழிலாளர்களை வேலையிலிருந்து விரட்டி வருகின்றனர். அந்நிய எஜமானர்கள் முன்பு வேலைசெய்த தொழிலாளர்களில் 52% பேரை ஆட்குறைப்புச் செய்துள்ளனர். பெருவிய அரசே அந்நியர்க்கு அரசுகம்பனிகளை விற்பதற்கு முன்பாகவே தொழிலாளர்களை வேலையிலிருந்து விரட்டி வருகின்றது. உதாரணமாக: "செரோ ஏர்டே" செப்புச்சுரங்கத்தை விற்பனை செய்வதற்கு முன்பு பெருவிய அரசு முன்பு வேலைபுரிந்த தொழிலாளர்களை 1300-ல் இருந்து 785 ஆக குறைத்து மீதிப்பேரை வேலையிலிருந்து விரட்டிவிட்டது.

பிஜிமோரி அரசினது தேசவிரோதப் பொருளாதாரக் கொள்கை பலமான எதிர்ப்பை நாட்டில் தோற்றுவித்துள்ளது. இதனால் பாசிச பிஜிமோரி அரசு பலவித கறுப்புச்சட்டங்களைக் கொண்டுவந்து அதிகரித்த அடக்குமுறைகளை பெரு மக்கள் மீது ஏவிவிட்டுள்ளது. இராணுவத்திற்கு அதிக அதிகாரங்களை வழங்கியுள்ளது. அமெரிக்காவின் விசுவாச ஏவல் நாயான பெருவின் பிஜிமோரி பாசிசஅரசு பெரு கம்யூனிஸ்ட் கட்சியான 'ஒளிரும் பாதை'யால் தலைமை தாங்கப்படும் புரட்சிப்போரில் அதிகளவு இணைந்துகொள்ளும் பின்தங்கிய மலைப்பகுதி காடுகளை அண்டிய கிராமங்கள் மீது பெரியளவிலான தாக்குதல்களை கட்டவிழ்த்துவிட்டுள்ளது. ஒளிரும்பாதைகெரிலாக்கள் வேரூன்றியுள்ள இப்பிரதேசங்களில் சித்திரவதைகள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

படுகொலைகளையும், பெண்களை பாலியல் பலாத்காரம் புரிந்தும் விமானங்கள், ஹெலிகாட்டர்களிலிருந்து குண்டுவீச்சுக்களை நிகழ்த்தியும் அட்டூழியம் புரிந்தும் வருகின்றது. இப் பிரதேசங்களில் நிகழ்த்தப்படும் அரசபயங்கரவாதங்கள் பற்றிய தகவல்கள் வெளியுலகிற்கு தெரிவதை தடைசெய்து வருகின்றபோதும் மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள் பலசம்பவங்களை அம்பலமாக்கியுள்ளனர். அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் பாசிச பிஜிமோரி அரசிற்கு இவ் இராணுவ அட்டூழியங்களுக்கு சகல உதவிகளையும் வழங்கிவருகின்றனர். பிஜிமோரி ஆட்சி 'ஒளிரும்பாதை' கம்யூனிஸ்ட் தலைவர் கொன்சாலே இனது கைதினால் கிடைத்த வெற்றியைப் பயன்படுத்தி புரட்சியாளர்களை ஒடுக்க வெறியுடன் செயற்படுகின்றது. அனைத்து ஜனநாயக உரிமைகளும் பெருவிய தொழிலாளர்கள், விவசாயிகள், பழங்குடிமக்களுக்கு மறுக்கப்பட்டுள்ளது. விவசாயிகள், பழங்குடிகள் தமது நிலங்களையும் வாழ்வையுமிழந்து வருகின்றார்கள். அதிகரித்துவரும் அந்நிய ஆக்கிரமிப்பில் பெருவிய மக்கள் தமது வாழ்வின் அனைத்து அர்த்தங்களையுமிழந்து வருகின்றார்கள். அந்நிய ஆதிக்கம் பெருவிய மக்களது வாழ்வில் பெருத்தபாதிப்புக்களை ஏற்படுத்தி வருகின்றது. எனினும் நூற்றாண்டுகளாக அந்நிய ஆதிக்கத்தை எதிர்த்து தீரத்துடன் போரிட்ட பெருவிய மக்கள் தொடர்ந்தும் அந்நியருக்கெதிரான போரில் உறுதியுடன்போரிட்டு வெற்றி பெறுவர். ✸ தகவல் ஆதாரம்: RED STAR, JUNE' 94

## தொழிற்சங்கங்களின் .......

முன்பக்கத் தொடர்ச்சி

ஒரு முதலாளி அலறுவதற்குப் பதில் தொழிற்சங்கங்களே அலறுகின்றன என்றால், எவ்வளவு சலுகைகளை முதலாளிகளின் மூலம் இத் தொழிற்சங்க பிரமுகர்கள் அனுபவித்தனர் என்பது சொல்லாமலே புரியும்.

தொழிலாளர்கள் விழிப்புற்று வரும் இன்றய நிலைமைகளில் இத் தொழிற்சங்கத் தலைமைகள் முதலாளிகளுடன் கூட்டுச் சேர்ந்து தமது வன்முறைகளைத் தொடங்க காத்து நிற்கின்றன.

தொழிலாளர்கள் "தீய போக்குடனான அரசியல் சக்திகளின் வலையில் வீழ்ந்துவிடாதிருக்கு மாறு" இந்தக் கூட்டுத் தொழிற்சங்க சபை அனுதாப வேண்டுகோள் விடுக்குமளவிற்கு தொழிலாளர்கள் அரசியல் விழிப்புணர்வு பெற்று வருகின்றனர். சுத்துமாத்து, ஏமாற்று, மோசடி போன்ற வழிகளில் தமது அரசியல் பிழைப்புக்களை காலம்காலமாக பயன்படுத்திவந்த இந்த தொழிற்சங்கங்கள், தொழிலாளர்களின் அரசியல் விழிப்பை 'தீய சக்திகளுடன் தொடர்பு என புது அகராதி படைத்து அவதூறாகப் புலம்பியுள்ளது.

1986ல் யாழ்பல்கலைக்கழக மாணவர்கள் ஜனநாயகம் கோரிப் போராடியபோது புலிகள் தீய சக்திகள் தவறாக வழிநடத்துவதாகக் கூறி "ஜனநாயக வழியில் நாம் அரசியல் அனாதைகள் ஆகிவிடுவோம்" என துண்டுப்பிரசுரத்தை வெளிவிட்டனர். இன்று தொழிற்சங்கங்கள் கூட்டாக அதைப்போல் "தீய சக்திகள்" தான் இதுபோன்று தவறாக வழிநடத்துவதாகக் கூறி இவர்கள் புலிகளின் சிறந்த மாணாக்கர் ஆகியுள்ளனர். "உரிமைகளைப் பெற சமாதான முறையிலும், பேச்சுவார்த்தை மூலமும் போராடும் மார்க்கம் இருக்க ஏன் மாற்றுவழிகளில் போராடவேண்டும்" என இக் கூட்டுத்துரோகிகள் பிரசங்கம் செய்கின்றனர்.

உரிமைகளை, சலுகைகளை எங்கே? எப்போது? சமாதானமாக ஒரு முதலாளி வழங்கியுள்ளான். தொழிலாளர்கள் போராடித்தான் பெற்றுக் கொண்டனர். சமாதானதின் மூலமாகவோ, வழிபாடுகள் மூலமாகவோ எதையும் ஒரு முதலாளி வழங்கியதாக இல்லை. மாறாக ஒரு தொழிலாளி, மக்கள், அற்பசலுகைகளைக் கூட போராடித்தான் பெற்றனர்.

போராடிப் பெறுவது "தொழிலாளர் வர்க்கத்திற்கும், தொழிற் சங்கத்திற்கும் அபகீர்த்தியை" பெற்றுத்தரும் என்று கூறுவதன் மூலம் முதலாளிக்கு அழகாக குண்டிகழுவிவிட முனைகின்றனர்.

தொழிலாளர் போராடுவது "உள்நாட்டு, வெளிநாட்டுச் சதி" என வர்ணனை செய்துள்ளது. இந்தப் பச்சைப் பொய்களையும், துரோகிகளையும் தூக்கியெறிந்து புரட்சிகர தொழிற் சங்கங்களை நிறுவுவதே ஒவ்வொரு தொழிலாளர்களின் பணியாக இன்றுள்ளது. அதுவே இலங்கை, தமிழீழப் புரட்சிக்கும் அடிப்படையாக உள்ளது.

## பாப்பரசரின் இலங்கை........................

முன்பக்கத் தொடர்ச்சி .......

பிழையான திசைவழியே இப்போராட்டங்கள் எடுத்துச் செல்லப்பட்ட போதிலும் இப் போராட்டங்களை இட்டு ஏகாதிபத்தியங்கள் அச்சங்கொண்டுள்ளன. ஏகாதிபத்தியம் உலக ஒழுங்கைப் பேணிக்காக்க பாப்பரசரை இலங்கைக்கு அனுப்பியுள்ளது. பிழையான பாதையில் இப் போராட்டம் சென்றபோதிலும் அதற்குவெளியில் சரியான சக்திகள் மூச்சாக வளர்ந்தவண்ணமே உள்ளனர். இது எதிர்காலத்திற்கும், ஏகாதிபத்திய நலன்களுக்கும் என்றும் எதிரானவை. இதை நன்குணர்ந்த பாப்பரசர் மதத் தலைவர்களுக்கு விடுத்த உருக்கமான வேண்டுகோளில் "பல நவீன சமூகங்களைப்போலவே, இலங்கையும் ➲



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பொருள்முதல்வாத நோக்கின் வளர்ச்சி காரணமாக ஆன்மீகத்திற்கான அச்சுறுத்தல் ஒன்றை எதிர் நோக்குகின்றது. இந்தப் பொருள்முதல்வாத நோக்கும் அணுகுமுறையும் வாழ்வைவிட பொருளைக் கொண்டிருப்பதிலேயே கூடுதலான அக்கறையைக் கொண்டிருக்கின்றன." என்று மக்களின் விஞ்ஞானபூர்வமான எழுச்சிகளைக்கண்டு ஒப்பாரிவைத்துள்ளனர். கருத்து முதல்வாதத்தை உயர்த்தும்படியும் மூடநம்பிக்கைகளை மக்களைப் போதித்து மக்களை அடிமை நுகத்தடியில் பிணைக்குமாறு மதத்தலைவர்களைப் பார்த்து உருக்கமாக வேண்டுகின்றார்.

அன்று கலிலியோ பூமி உருண்டையென நிறுவியபோது அன்றைய பாப்பரசர் அதைப் பொருள்முதல்வாதமென கண்டு கருத்துமுதல்வாதத்தை தக்கவைக்க கலிலியோவை படுகொலைசெய்தனர். இன்று பாப்பரசர் பறந்துவரும் விமானம் பூமி உருண்டையென்ற அதே தத்துவத்தின் அடிப்டையிலேயே இலங்கையில் தரையிறங்கியது. பூமி தட்டையென்ற பைபிள் எவ்வளவு போலியானது.

இதே பைபிளில் 1 moses 9, 20-27 பகுதியின்படி கருநிற மேனியுடைய இனங்களின் துன்பங்களுக்கு கடவுளின் சாபக்கேடே காரணமென்பதும், வெவ்வேறு இனங்களின் வித்தியாசங்கள் அவர்களின் சாபக்கேட்டைப் பொறுத்தே நிர்ணயிக்கப்பட்டுள்ளன என்றும் கூறுகின்றது. இதைத்தான் " Lexca of the world missionaries " ம் சொல்கின்றது. இதன்படி கடவுளின் தோற்றம் வெள்ளையாகவும், சாத்தானின் தோற்றம் கறுப்பாகவும் இருக்குமாம்.

பாப்பரசரின் நோக்கம் ஆண்டவன் என்ற பெயரால் மக்களை அதற்குள் அமுக்கி ஏகாதிபத்தியங்கள் கொள்ளையடிக்க, மக்களின் மீது சவாரிசெய்ய வழி அமைப்பதேயாகும். இதன் மூலம் உலகிலுள்ள மொத்த செல்வங்ககளில் 86 சதவிகிதத்தை ஏகாதிபத்தியங்கள் கொள்ளையடிக்க வழியமைப்பதாகும். இந்த 86 சதவிகிதத்தை ஏகாதிபத்திய நாட்டில் வாழும் 24 சதவிகத்தினர் பகிர்ந்து கொள்ளவே. இலங்கை போன்ற மூன்றாம் உலக நாடுகள் உலகிலுள்ள மொத்த வளத்தில் கிடைப்பது என்னவோ 1.6 சதவிகிதம் மட்டுமே. இதுதான் பாப்பரசரின் நோக்கமும். இலங்கையில் ஒரு புரட்சி ஏற்பட்டுவிடக்கூடாது என்பதில் பாப்பரசர் போன்றவர்கள் அதிக கவனமாகவே உள்ளனர்.

## சுவிஸ் படுகொலை:

**உமா மகேஸ்வரனை பழிக்குப்பழி தீர்த்தவர்கள்,**

**உண்மையான விடுதலை வீரர்களே!**

ஐரோப்பாவில் மீண்டுமொரு அரசியற் படுகொலை அரங்கேறியுள்ளது. முன்னைய சபாலிங்கம் அரசியற் படுகொலையைச் செய்தவர்கள் இக்கொலையைச் செய்யவில்லை: மாறாக, அரசுடன் கூடிக்குலாவிய படி தமது துரோகத்தின் நிழல்களில் வாழும் PLOTE இனரே இப் படுகொலையை நிகழ்த்தியுள்ளனர்.



உமா மகேஸ்வரன்

PLOTE இன் இன்றய இராணுவத்தளபதி சட்டபூர்வமாக ஐரோப்பாவுக்கு அடிக்கடி வந்துபோகும் வேளைகளில் இக் கொலைக்கான திட்டம் தீட்டப்பட்டது. ஐரோப்பாவில் அரசியற் புகலிடத்தைக் கோரிய ஒரு கொலையாளியின் மூலம் இத்திட்டத்தை நிறைவேற்றப்பட்டது.

கொல்லப்பட்டவரான உதயகுமார் (ராவின்) இனதும், அவர் மனைவியான கிரியாவினதும் (வக்ஸலா) மனிதாபிமான உணர்வுகளைப் பயன்படுத்தி, அவ் இராணுவத் தளபதியே கொலையாளியை அவர்களுடன் தங்கவைத்தான்.

கொல்லப்பட்ட ராவின் PLOTE யின் முன்னாள் உறுப்பினர் ஆவர். சொந்தச் சகோதரர்களையும், ஒரே தட்டில் சாப்பிட்டுவந்த சகதோழர்களையும், அப்பாவி மக்களையும் ஈவிரக்கமின்றி உமாமகேஸ்வரன் படுகொலைசெய்த நிலைமைகளில், தாம் நேசித்த தோழர்களை படுகொலைசெய்த உமாமகேஸ்வரனை பழிக்குப்பழி தீர்த்துக்கொள்ளவும், தற்காப்பிற்காகவும் கொலையாளி உமாமகேஸ்வரனை கொன்று ஒழித்தனர்.

இது ஒரு சதியல்ல: தற்காப்பு நிலைமைகளில் தமது சகதோழர்களின் மரணத்தின் மீதான பழி தீர்பாகவே அமைந்தது. இவர்கள் இவ் வேலையை ➲



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

முடித்துக்கொண்டதுடன், அரசியலிலிருந்து முற்றாகவே ஒதுங்கி சாதாரண வாழ்க்கைக்குத் திரும்பியிருந்தனர்.

PLOTE யினர் ஆரம்பகாலங்களில் என்ன காரணங்களுக்காக புலிகளிலிருந்து பிரிந்தார்களோ அதே காரணங்களை தமது அமைப்பான PLOTE யில் மிக மோசமாக கடைப்பிடித்து வந்தார்கள். PLOTE யின் உடைவிற்கு முன்னரே உமாமகேஸ்வரன் – ஊர்மிளாவுடனான நடத்தை தொடர்பாக வெளியேற்றப்பட்ட நிலையில், உடைவின் பின்னர் உமாமகேஸ்வரன் PLOTE இல் இருக்கவில்லை.

பின்நாட்களில் சுந்தரம், உமாமகேஸ்வரனை இணைத்துக்கொண்டதும் PLOTE யில் இருந்த முன்னேறிய அரசியற் சக்திகள் பலரும் ஒதுங்கிக்கொண்டனர். உமாமகேஸ்வரன் தலைமையில் வளர்ந்த PLOTE 1000க் கணக்கான இளைஞர்களைப் படுகொலை செய்தது. அரசியலை விமர்சித்தவர்களை, கேள்வி கேட்டவர்களை, சந்தேகம் கொண்டவர்களை, தமது அலுப்புக்களுக்கும் கொலைவெறித்தனத்திற்கும் கொலைகளாய்ச் செய்து குவித்தனர். PLOTE யின் சவுக்குத் தோப்பு கொலைகள் பிரபல்யமானவை. சுழிபுரம் படுகொலை, சந்ததியார் படுகொலை, செல்வன்–அகிலன் படுகொலை, என எண்ணற்ற கொலைகளைச் செய்தனர். அச்சுவேலியிலிருந்து பயிற்சிக்காக சென்ற ஒருவன் மீதான சந்தேகத்தைத் தொடர்ந்து, அச்சுவேலியிலிருந்து PLOTE க்காக பயிற்சிக்குச் சென்ற அனைவருமே கொல்லப்பட்டனர்.



கொல்லப்பட்ட தம்பதியினர்.

முதுகுத் தோலை வகிர்ந்து மிளகாயத் தூள் வைத்துத் தைப்பது முதற்கொண்டு, கொல்லப்பட்டவர்களின் சடலங்களை சிறு சிறு துண்டுகளாக வெட்டி தமது 'கக்கூஸ்' கிடங்குகளில் போடுவது வரைக்கும் இவர்களது கொலைவெறியின் மூர்க்கம் தணியாது வளர்ந்தது.

விடுதலையை நம்பிய ஆயிரமாயிரம் இளைஞர்களின் போராட்ட உணர்வை சில சமூகவிரோதிகள் தமது காம விளையாட்டுக்கும், அதிகாரத்திற்கும், ஆடம்பரத்திற்கும், துரோகத்திற்கும் பலியிட்டனர். விடுதலையை மட்டும் நம்பிய அரசியலற்ற இளைஞர்களின் இயக்க விசுவாசத்தை, இயக்கம் மீதான பயபக்தியை இச்சமூக விரோதிகள் , ஒருசில அப்பாவிகளை தவறான வழிகளுக்கு இட்டுச்சென்று கொலைகளுக்குப் பயன்படுத்தினர்.

சர்வதேச புகழ்பெற்ற போதைவஸ்து கடத்தல் வேலைகளில் ஈடுபட்டவண்ணம், தனக்கு ஆலவட்டம் பிடிப்பவர்களை திட்டமிட்டு தலைமைக்கு உயர்த்தியவன் இக்கொலைகார உமாமகேஸ்வரன்.

உமாமகேஸ்வரனின் காம களியாட்டங்கள் பல. சொந்த மனைவி இருந்தபடி இருக்க பிறிதோர் குடும்பத்தில் தாய் மகளென இருவரையும் தனது 'சின்னவீடுகள்' ஆக்கினான் உமாமகேஸ்வரன். இயக்கத்திலிருந்த ஒரு பெண்போராளி இராணுவத்திற்கு எதிராக தாக்குதல் (FIELD) செய்யும்படி உமாமகேஸ்வரனைக் கோரியபோது: "நீ ரெடி எனின்: நான் உனக்கு FIELD (தாக்குதல்) செய்யத் தயார்"– என்றான். பிறிதோர் இயக்கப் பெண்போராளியை "நீ எல்லாவற்றிற்கும் தயார் எனின் PLOT மகளீர் அமைப்புப் பொறுப்பாளர் ஆக்கமுடியும்" என்றான். இதே காமுகன் வேறு ஒரு PLOT காமுகனால் ஒரு பெண் இந்தியாவில் கற்பழிக்கப்பட்டபோது: அதுபற்றிய விசாரணைக்கு முன் அவையில் இதுபற்றிய வாக்குவாதத்தில் "கீறல்காயங்கள் பெண் உடலில் உண்டா?" எனக் கேட்டு அக்காமுகனைக் காப்பாற்றினான். இப்படிப் பல...

மறுபுறத்தில் துரோகத்தையும், கைகூலித்தனத்தனத்தையம் எதிர்த்த முன்னேறிய அரசியல் வழிகாட்டிகளை கொல்லத் தொடங்கினர். அது ஆயிரங்களைத் தாண்டின. இந்தியாவில்தான் PLOT ல் இருந்தவர்கள் இரகசியமாக இந்த கொலைகார உளவுப்படையைக் கண்டு வெகுண்டு ஓடத் தொடங்கினர்.

இன்று பம்பாய்த் 'தூள்மன்னன்' வாமதேவன் முதல் ஆரிய குளத்தடி 'ரவுடி' ஈறாக இந்தக் கொலைகளுக்குத் தலைமை தாங்கினர். எல்லாச் சமூகவிரோதிகளும் விடுதலை மீது நேசம்கொண்ட இளைஞர்கள்மீது ஏறிச் சவாரி செய்தனர்.

ஐரோப்பா எங்கும் 'தூள்' கடத்தி சிலரை உள்ளே அனுப்பினார். இந்தியாவில் இருந்தபடி "றோ" (ROW) முதல் இலங்கைத் தூதுவர் ஈறாக ஆர்ப்பாட்டமாகச் சந்தித்து விருந்துண்டு ஆடிப்பாடினர்.

உமாமகேஸ்வரன் 1975 களில் புலியுடன் ஆரம்பத் தொடர்புகள் கொண்ட நாட்களில் ஒரு சாதிவெறியனாக சாதிச்சண்டைகளுக்குத் தலைமை கொடுத்தவன். இந்தச் சாதிவெறியனும், ரவுடிக் கும்பலும் PLOT என்னும் பெரிய அமைப்பின் தலைமையில் இருந்தது என்பது ஆயிரமாயிரம் இளைஞர்களைப் பலிகேட்டது.

திருகோணமலையில் இருந்து பருத்தித்துறை வந்த தாய், தகப்பன்– இரு மகள்களை அச்சுவேலி பஸ்நிலையத்தில் உளவாளிகள் எனப்பிடித்து PLOTE அவர்களை கொன்றது. கொல்லமுன்னர் பருத்தித்துறைக்குச் சென்று அவர்களின் ➲



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உறவினரை விசாரிக்க ஒருவர்மாறி ஒருவர் மறுத்தநிலையில், தமது அலுப்பைத்தீர்க்க "மண்டையில் போட்டுவிடும்"படி கூறி கொன்றனர். இப்படி அடுக்கடுக்காக கொலைகள் தொடர்ந்தன. இந்த நிலையில்தான் உமாமகேஸ்வரனின் மெய்ப்பாதுகாவலர் உட்பட கொழும்பு பொறுப்பாளர்களென சிலர் தமது சகதோழர்கள் கொல்லப்பட்டதைப் பொறுக்கமுடியாமல் அடுத்து தமக்கே என்ற நிலையில் இவர்கள் உமாமகேஸ்வரனை பழி தீர்த்துக்கொண்டனர். அத்துடன் அவ்வியக்கத்தை விட்டு விலகி நாட்டைவிட்டு புலம் பெயர்ந்தனர்.

இன்று கொலைகாரன் உமாமகேஸ்வரனின் கொலைகளிலிருந்து தப்பி, வெளிநாட்டில் அரசியற் தஞ்சம்கோரி தற்காப்பில் ஈடுபட்ட ஒருவனை துரோகப் PLOTE பழிதீர்த்துக் கொண்டது, ஏன்? நாதியற்று, மிரட்டல் மூலமே மக்கள் மத்தியில் வாக்குகளைப் பெற்ற வண்ணமுள்ள PLOTE தமது கீழ்மட்ட அப்பாவி இளைஞர்களை தவிர்க்க முடியாது இருக்க நிர்ப்பந்தித்துள்ளது. அடுத்தநேர உணவிற்கு வழியற்ற இவர்களை PLOTE தனது துரோகத்திற்கு பயன்படுத்துகின்றது. இந்த இளைஞர்களை மிரட்டவும், இயக்கவிசுவாசமுள்ள அப்பாவிகளை மேலும் உமாமகேஸ்வரன் கொலைமூலம் பற்று ஏற்படுத்தவும் செய்யப்பட்ட கொலையே இது.

கொலையாளி தன்னை இனம்காட்டாதிருக்க கொல்லப்பட்டவரின் அப்பாவி மனைவியையும் கொலைசெய்து தமது முன்னய கொலைகளை மீண்டுமொருமுறை உலகிற்கு பறைசாற்றியுள்ளனர். PLOT என்ற துரோக்குழு அரச இராணுவமாக மாறி உண்மையான விடுதலைவீரர்களையும், அப்பாவிகளையும் கொன்று எதைத்தான் சாதிக்கப்போகிறது. தமிழ் மக்களின் தேசவிடுதலையை பச்சையாகக் கொன்று, இரத்தத்தை உறிஞ்சிக் குடித்து கொட்டாவி விட்டு சுவைத்தபடி இச்சமூக விரோதக் கும்பல் உயிர்வாழ நினைக்கிறது– விடுதலையைக் குழிதோண்டிப் புதைத்து.

---

**வாசகர்களுக்கு ஒரு அறிவித்தல்**

**மார்க்ஸ், ஏங்கல்ஸ், மாவோயிச சிந்தனைகள் புரட்சிகர தத்துவங்கள் உள்ளடங்கிய நூல்கள் விற்பனைக்குண்டு .**

**பெற்றுக்கொள்ள விரும்புவோர் சமர் முகவரிக்கு கடிதம் மூலம் தொடர்பு கொள்ளவும்**

# விவாத மேடை

> இக்கட்டுரை உங்கள் சிந்தனையை தூண்டும் வகையில் உள்ளதுடன், எமது நாட்டில் ஒரு வர்க்க ஆய்வின் அவசியத்தை வேண்டி நிற்கின்றது. அந்த வகையில் இக் கட்டுரையை சமர் வெளியிடுவதுடன், இக் கட்டுரையை ஒட்டி சிந்திக்க இக்கட்டுரையைத் தொடர்ந்து சமர் சில புள்ளி விபரத்தை இணைத்துள்ளது. உங்களிடமிருந்து, இந்த விவாதப் பகுதியை நோக்கிய உங்கள் கருத்துக்களை வரவேற்கின்றது.
>
> சமர்

தொடர்ச்சியான இன ஒதுக்கல், பாரபட்ச நடவடிக்கைகளாலும், இனப்படுகொலைகளாலும் முகிழ்ந்தெழுந்த தமிழீழ தேசிய விடுதலைப்போராட்டம் 80 களின் நடுப்பகுதியில் வீறுபெற்று தமிழ்த் தேசிய இன மக்களுக்கு பெருத்த நம்பிக்கைகளையும், விடுதலை மீதான எதிர்பார்ப்புக்களையும் அளித்திருந்தது. அதன் பின்பாக பல திருப்பங்களை அடைந்து, இன்று சொந்த மக்களுக்கு எவ்வித ஜனநாயகத்தையும் வழங்க மறுக்கின்ற, மற்றைய சிறுபான்மை இனங்களை ஒடுக்குகின்ற இராணுவ சர்வாதிகார அமைப்பான தமிழீழ விடுதலைப் புலிகளின் ஏகபோகத்தின் கீழ் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

தமிழீழ விடுதலைப்போராட்டத்தின் ஆரம்ப கட்டங்களிலேயே தேசிய விடுதலையை புரட்சிகர அரசியல் தலைமையின் கீழ் முன்னெடுப் பதற்கான பல முயற்சிகள் சமூகமாற்றத்தை நோக்கமாகக் கொண்டிருந்த சக்திகளால் மேற்கொள்ளப்பட்டு வந்தன. எனினும் தமிழ்த் தேசிய இன விடுதலைப்போரின் தலைமையை பலம்வாய்ந்த இராணுவ சர்வாதிகார அமைப்பு கைப்பற்றிக்கொண்டதே கடந்தகால நிகழ்வாக அமைந்ததை நாம் கண்டுள்ளோம். 80 களின் முற்பகுதியில் இருந்ததைவிட தனது ஆதிக்கத்தை நிலைநிறுத்தி வைப்பதற்கான பல சாதகமான அம்சங்களை விடுதலைப்புலிகள் அமைப்பும், தேசிய விடுதலை அரங்கில் தலைமீடு செய்வதற்கான வாய்ப்பே முற்றாக இல்லாத சூழ்நிலையை புரட்சிகர மாற்றுத் தலைமை பற்றிய ➲



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கருத்துடைய சக்திகளும் கொண்டிருக்கின்ற இன்றைய நிலைமைகளில் தமிழ்த்தேசியத்தின் முற்போக்கான அரசியல் சக்திகளுக் கிடையே எழுகின்ற கேள்வி: தேசிய விடுதலைப் போரிற்கு புரட்சிகர அரசியல் தலைமையை உருவாக்குவது எப்படி? என்பதே.

தேசிய விடுதலைப் போராட்டத்திற்கு புரட்சிகர தலைமை ஒன்று மாற்றீடாக உருவாக வேண்டுமெனின்: இனன்றைய ஜனநாயவிரோத தலைமை இடம் பெயர்க்கப்படல் வேண்டும். புரட்சிகர ஸ்தாபனமொன்று போராட்ட அரங்கில் வளர்ச்சிபெறுவதன் மூலமே தற்போதைய தலைமை இடம் பெயர்க்கப்படுவது சாத்தியமாகும். எனினும் விடுதலைப்புலிகள் அமைப்பு மக்களினது அனைத்து ஜனநாயக உரிமைகளையும் மறுத்து மாற்று அரசியல் சக்திகள் அனைத்தையும் அழித்தொழித்து வருகின்ற நிலைமைகளின் கீழ், இராணுவ உத்திகள், செயற்பாடுகளில்– உளவு நடவடிக்கைகள், அழித்தொழிப்புகளில் படிமுறையான வளர்ச்சி, போன்றவைகைளைப் பெற்று ஒப்பீட்டளவில் அதீத பலம்பெற்றுள்ள புலிகளினது அழித்தொழிப்பை எதிர்கொண்டு ஓர் இஸ்தாபனம் தனது ஆரம்ப நிலையிலிருந்து வளர்ச்சிபெற்று நிலைபெறுவது நடைமுறைரீதியாக சாத்தியப்பட இயலாததாக இன்றுள்ள யதார்த்த நிலைமைகள் உள்ளபோது: எமது தேசிய இனத்தினது, இலங்கை மக்களினது விடுதலையை, சமூகமாற்றத்தை நோக்கமாகக் கொண்ட சக்திகளினது இன்றய பணி, செயல்முறை, என்ன? என்பது எம்முன் உள்ள பெரியதொரு வினாவாகும்.

நாம் சமூகமாற்றத்தை நோக்கமாகக் கொண்டவர்கள் என்ற வகையில் எம்தேசிய இனத்தினது, இலங்கை மக்களது, உலகமக்களின் நலன்களில் திசைவழிப்பட்ட அரசியல் சித்தாந்தமான வர்க்க அரசியலை ஏற்றுள்ளவர்களாக உள்ளோம். வர்க்க சித்தாந்தமான மார்க்சிய–லெனினிய–மாஓ சிந்தனைகளின் வழியில் எமது தேசிய இனத்தின், இலங்கைத் தீவின், சர்வதேசங்களின் நிலைமைகளை, முரண்பாடுகளை அணுகுவதே எமது அணுகுமுறையாகும்.

இவ் அணுகுமுறையின் வெளிச்சத்தில் இலங்கைச் சமூகத்தின் முரண்பாடுகளை இன்றய நிலைமைகளின் கீழ் பகுப்பாய்வு செய்வது அவசியமாகின்றது. தம்மைத் தனித்துவமாக அடையாளம் காண்கின்ற மனோவியலைக் கொண்ட நான்கு தேசிய இனங்களை கொண்டதாக இலங்கைத் தீவு உள்ளது. பெரும்பான்மை இனமான சிங்களத் தேசிய இனம் தவிர்ந்த மற்றய சிறுபான்மை இனங்கள் நீண்ட காலமாக இன ஒடுக்கல், பாரபட்ச நடவடிக்கைகளால் பெரும் பாதிப்புக்குள்ளாகி வருகின்றன. இதில் வடக்கு கிழக்கு பிரதேச தமிழ்த்தேசிய இனத்தின் மீது நேரடியாக அழித்தொழிப்பு யுத்தம் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளது. வடக்குக் கிழக்கு பிரதேசங்கள் இயல்பு நிலைமைகளிலிருந்து விடுபட்டு நீண்ட காலமாக யுத்தத்தின் பிடிக்குள் சிக்குண்டவையாக உள்ளன. 'ஈழம்' எனத் தமது பிரதேசத்தை அடையாளப்படுத்தும் வடக்கு, கிழக்கு தமிழ்தேசிய இனத்தின் பிரதான பிரச்சனையாக இன ஒடுக்குமுறையே உள்ளது.

ஈழப் பிரதேசங்கள் பொருளாதார மட்டத்தில் நிலப்பிரபுத்துவ கூறுகளிலிருந்து பெருமளவு விடுபட்டு குறைவளர்ச்சி கொண்ட முதலாளித்துவ கூறுகளைக் கொண்டதாகவும், பெரும் எண்ணிக்கையிலான நடுத்தர வாக்கத்தைக் கொண்டதாகவும் உள்ளது. வர்க்க முரண்பாடுகள் உச்சநிலையை அடையாததாகவும், வர்க்கரீதியிலான ஏற்றத்தாழ்வுகள் பாரியதாக இல்லாத நிலைமை களைக் கொண்டதாக ஈழத்தின் சமூக அமைப்பு அமைந்துள்ளது. சாதி வாரியாக தாழ்த்தப்பட்ட மக்களும், மலையகத்திலிருந்து இடம்பெயர்ந்த மக்களுமே நிலத்தின் மீது உடமையைக் கொண்டிராதவர்களாகவும் கூலி விவசாயிகளாகவோ, உழைக்கும் வர்க்கப் பிரிவாகவோ பெரும்பாலும் குடாநாடு, வன்னி மாவட்டங்களில் உள்ளனர். கிழக்கு மாகாணம் கணிசமான வீதத்தில் கூலிவிவசாயிகளைக் கொண்டுள்ளது. எனினும் ஈழப்பிரதேசம் பூராவுமே கூலி, ஏழை, நடுத்தர விவசாயிகள் வறுமையுடனும் பற்றாக்குறைகளுடனும் வாழ்ந்து வருவதை அவதானிக்க இயலும். இவைகளது இந்நிலைமைகளின் காரணிகள் நேரடியாக பெரும் நிலவுடமையாளர்களுடனோ, வேறு நேரடியான சுரண்டல் காரணிகளுடனோ பிணைப்புக் கொண்டுள்ளதாவும், விவசாயத் துறை புறக்கணிக்கப்பட்டமை, அத்துறையில் முதலாளித்துவ வளர்ச்சியின் மந்தநிலைமை, விவசாய விளைபொருட்களின் இறக்குமதி, முறையான சந்தைப்படுத்தலுக்கான வாய்ப்புக்களின்மை போன்ற, தரகுமுதலாளிகளின் நலன்கள் சார்ந்த தேசிய விரோத அரசினது பொருளாதாரக் கொள்கை களினூடேயே விவசாயம் சார்ந்த மக்களது துயரங்களுக்கான காரணங்களை அடையாளம் காணல் இயலும். பெரும் நிலப்பிரபுக்களோ, அவைசார்ந்த பொருளாதார உறவு நிலைமைகளோ ஈழப்பிரதேசத்தில் பெரும்பாலும் இல்லையென்றே கூறலாம். நிலத்தின் மீதான உட்மை தொடர்பாக பெருமளவு மக்கள் நிலத்திற்கான தேவையை கோரிநிற்கும் நிலை உள்ளபோதும் வர்க்க முரண்பாடாக இப்பிரச்சனை பெரும்பாலும் கூர்மைபெறாமல் மேலும் நிலங்களை விவசாயத்திற்கு நடவடிக்கைகளுடனும் தொடர்புற்று உள்ளது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நிலச்சுவாந்தர்களாகவோ, பெரும் நிலவுடமையாளர்களாகவோ வர்க்கம் என்கின்ற அளவில் ஈழத்தில் இன்றய வர்க்க அமைப்பு இல்லை. பெரும்பாலும் நிலத்தின் மீது சிறு உடமையைக் கொண்டிருப்பதையே காண இயலும்.

ஈழப்பிரதேசத்தில் விவசாயத்துறையிலோ, பிறதுறைகளிலோ சுரண்டல் நிகழவில்லை எனக்கூற இயலாது. எனினும் சரண்டலையும், வர்க்க முரண்பாடுகளையும் பாரியதாக உணர்கின்ற வகையில் அவை தம்மை வெளிப்படுத்தவில்லை. சாதி ரீதியான ஒடுக்குமுறைக்கெதிராக ஒடுக்கப்பட்ட மக்கள் வர்க்க சிந்தனையாளர் தலைமையில் அணிதிரண்டு போராடினரேயொழிய பொருளாதார போராட்டங்கள், கூலி உயர்வுப்போராட்டங்கள் பொரும்வீச்சில் நடைபெற்ற நிகழ்வுகள் ஈழப்பிரதேசங்களில் கடந்தகாலங்களில் இடம்பெறவில்லை. விவசாயத்துறை நீங்கலாக மற்றய தொழில்துறைகளைப் பொறுத்தவரை தொழிற்சாலைகள், கனரக தொழில்துறைகளோ ஈழத்தில் வளர்ச்சி பெறவில்லை. அரச நிறுவனங்கள் சார்ந்த உத்தியோகஸ்தர்களே குறிப்பாக குடாநாட்டில் கணிசமான தொகையினராக இருந்தனர். இவர்கள் குடாநாட்டின் பெரும் எண்ணிக்கையிலான நடுத்தரவர்க்கத்தை பிரதிநிதித்துவப்படுத்தினர். மீன்பிடித் தொழிலைப் பொறுத்தவரை உடமையாளர்களுக்கும்–தொழிலாளர்களுக்குமிடையே வேறுபாடுகள் நிலவுகின்றபோதும் முரண்பாடுகள் உச்சம்பெறாத ஓர் உறவுநிலை விவசாயத்துறைபோல நிலவுவதைக் காணவியலும்.

இப் பொருளாதார வர்க்க நிலைமைகள் நிலவிய சமூகத்தில் தேசிய இன முரண்பாடு மேல்நிலை பெற்றதையடுத்து மேலும் பொருளாதார அடிப்படையிலான முரண்பாடுகள் வலுவிழந்து போயுள்ளதைக் காணவியலும். ஏனெனில் ஈழப்பகுதியின் பொருளாதாரச் செயற்பாடுகள் ஓர் ஸ்தம்பித நிலைமைக்குப் போயுள்ளன. முன்பு வாழ்வில் வறுமை, பற்றாக்குறையை எதிர்நோக்கிய மக்களுக்கும் தரகுமுதலாளிய அரசுக்குமிடையேதான் முரண்பாடுகள் நிலவியதேயொழிய தமிழ்தேசிய இனத்துக்குள்ளேயே வர்க்கமென்கின்ற அளவில் முரண்பாடு உச்சம் பெறவில்லை. யுத்தம் கட்டவிழ்த்து விடப்பட்டு இனமுரண்பாடு மேல்நிலைமை பெற்றநிலையில் பொருளாதாரச் செயற்பாடுகள் முடக்கப்பட்டு இருப்பதனால் வர்க்கம், சாதி, மதம் போன்ற முரண்பாடுகள் மேல்நிலை பெறாதவையாக உள்ளன. தேசிய இனமுரண்பாடே பிரதான முரண்பாடாக ஈழப்பகுதியில் உள்ளது. சாதி, பால் ரீதியிலான முரண்பாடு குறிப்பிட்ட அளவுகளில் நீடிக்கின்றபோதும் சாதி முரண்பாடு பொருளாதாரக் கூறுகளுடான தொடர்புகள் பெருமளவு அற்று கலாச்சார ரீதியாக நீடித்திருப்பதையே இன்றைய சூழலில் காணமுடிகின்றது. பால் ரீதியிலான முரண்பாடு மாறுதலின்றி நீடித்துள்ள நிலைமையே உள்ளது.

வர்க்க முரண்பாட்டின் உச்சநிலைமை காணப்படாத ஈழப்பகுதிகளில் சமூக மாற்றத்தை நோக்கமாகக் கொண்டு செய்படுவோர் எவ்வகையில் தமது உடனடியான, நீண்டகால நடைமுறை இலக்குகளை வகுத்துச் செயற்படவியலும்? தேசிய விடுதலைப்போரை எவ்வகையில் பாட்டாளிவர்க்க தலைமையுடைய 'புதிய ஜனநாயகப்புரட்சியாக கட்டமைக்க இயலும்? என்கின்ற கேள்விகளே இன்றய நிலைமைகளில் தமிழ்தேசிய இனப்போராட்ட அரங்கினுள் செயற்பட எத்தனிக்கும் சமூகமாற்றத்தை நோக்கமாகக் கொண்டவர்களிடையே விடை காணப்படவேண்டிய வினாக்களாக உள்ளன.

இவ்விடயத்தை இன்றைய ஈழத்தின் யதாத்த நிலைமைகளைக் கணக்கிலெடுத்து ஆராய்ந்து பார்ப்போமெனின்:

ஈழத்தின் பொருளாதார, வர்க்க நிலைமைகள் அடுத்தகட்டமாக கோரி நிற்பது தேசியமுதலாளித்துவ வளர்ச்சிக்கட்டத்தையே என்பதைக் காணவியலும். அக்கட்டத்தை நிறைவுசெய்யாத உடனடி இலக்குகள், கோஷங்கள் எதுவும் இன்றய காலகட்டத்தின், இன்றய அப்பிரதேச சமூகப் பொருளாதார நிலைமைகளுக்கு அந்நியமானவையே. ஆகவே தேசியமுதலாளித்துவ வளர்ச்சியைச் சாதிக்கின்றதும் அதை சோசலிஸக் கட்டுமானத்தை நோக்கியதாக வளர்த்தெடுக்கும் கூறுகளை உருவாக்குகின்றதுமான பணியே தமிழ்க் கம்யூனிஸ்டுக்களின் எதிர்காலத்துக்குரியது.

தமிழ்தேசிய இனவிடுதலைப்போரை எவ்வகையிலாவது கையகப்படுத்துவதன் மூலம் இதைச்சாதித்துவிட முடியுமா? என ஆராய்வோமெனின்: ஈழப்பகுதிகளில் புரட்கர வர்க்கக்கூறுகள் பலவீனமான நிலைமைகளில் காணப்படுவதால் தமிழ்தேசிய இனவிடுதலையை புரட்சிகர திசைவழியே வழிநடாத்தும் பணி தேசிய இனஎல்லைக்குள் மட்டுமேயானதாகவிருப்பின் கடினமானதாகவே இருக்கும். தேசியவிடுதலையை தமது நலனுக்கிசைந்ததாக பயன்படுத்த, தமதுமேலாதிக்கத்தை நிறுவ தேசியத்தின் மற்றயவர்க்கங்களும் போராடும் தமிழ்க்கம்யூனிஸ்டுகள் ஈழத்தின் குறைந்தவீதத்தில் அமைந்த புரட்சிகர வர்க்கங்களை பிரதிநிதித்துவம் செய்பவர்களாகவே இருக்கின்ற வாய்ப்புக்கள் இருப்பதை இன்றய வர்க்கநிலைமைகளின் அடிப்படையில் நாம் கவனத்தில் கொள்ளவேண்டும்.

இன்று உலகில் அனைத்து சமூகங்களினதும் அரசியல், பொருளாதார, கலாச்சார ➲



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அம்சங்கள் விரைந்து சர்வதேசமாகிவருவது நடந்தேறி வருகின்றது. இன்று தேசிய இனங்களினுள்ளேயோ, தேசிய எல்லைகளினுள்ளேயோ நடைபெறுகின்ற முரண்பாடுகளும், போராட்டங்களும் அவ்வெல்லைகளினுள்ளே அடங்கி நிற்பவையல்ல பரஸ்பரம் அவை சர்வதேச நிலைமைகளுடன் தொடர்புற்றவையாகவே உள்ளன. எமது சமூக முரண்பாடுகளுடன், பிராந்திய நிலைமைகளுடன் தொடர்பான சர்வதேசிய சக்திகளை நாம் மதிப்பிடாமல் எமது தேசிய விடுதலைப்போராட்டத்தை ஆக்கபூர்வமான திசைவழிகளில் எடுத்தச் செல்லுதல் சாத்தியமில்லை. தமிழ்தேசிய விடுதலைப்போர் ஒரு புரட்சிகர தலைமையால் முன்னெடுக்கப்படுவதை இந்திய தரகுமுதலாளித்துவ அரசோ, கொழும்பில் ஆதிக்கம் கொண்டுள்ள ஏகாதிபத்திய மேல்நிலை வல்லரசுகளோ அனுமதிக்கப்போவதில்லை. இன்று புரட்சிகர சக்திகளுக்கு ஆதரவளிக்கக்கூடிய சர்வதேச புரட்சிகர சக்தியோ, புரட்சிகர அரசுகளோ இல்லாத யதாத்தத்தில் வர்க்கப் புரட்சியாளர்கள் தமது இலக்குகளை நிறைவேற்ற சாதகமான அடிப்படைகளை பூர்த்திசெய்வது இன்றியமையாததாகும். தேசிய விடுதலையைப் புரட்சியின் திசைவழியில் முன்னெடுக்கும் நோக்கில் செயற்படுபவர்கள் இச்சர்வதேச நிலைமைகள் எம்போராட்டத்தில் விளைவிக்கும் பாதகமான நிலவரங்களை எதிர்கொண்டு எமது போராட்ட இலக்குகளை பாதுகாக்க வேண்டுமெனின் விரிந்தளவிலான செயற்திட்டங்களுடனும் அதற்கான தத்துவாத்தத்தையும் தெளிவாக வரையறுத்துச் செயற்பட வேண்டும். இன்று எந்தவொரு புரட்சிகர அம்சங்களை தன்னகத்தேகொண்ட போராட்டமும் தன்னை நிலைநிறுத்துவதெனின் தன்நிறைவான சுயசார்புப்பொருளாதாரத்தை கட்டியெழுப்பாமல் தனது போராட்ட வெற்றிகளை நிலைநிறுத்தவியலாது. இதற்குத் தமிழ்தேசிய விடுதலைப்போராட்டமும் விதிவிலக்கல்ல. ஈழப்பிரதேசத்தின் பொருளாதார வளங்கள் சுயசார்புத் தன்னிறைவுப் பொருளாதாரத்தை கட்டியமைப்பதற்கு போதிய வளங்களைக் கொண்டுள்ளதா? எனின்: இத்தகைய சிறிய பிரதேசம் இராட்சதர்களின் நெருக்குதலை எதிர்த்து தற்காத்துநிற்பது நடைமுறையில் கடினமானது. விளைவு– மக்கள் எதிர்கொள்ளும் நெருக்கடிகள் புரட்சியின் இலக்குகளுக்கு எதிரானதாகவும் நீண்டகாலத்திற்கு புரட்சிகர மாறுதல்களுக்கு பாதகமான சூழலையும் ஏற்படுத்திவிட வல்லவை. கியூபா, நிக்கரக்குவா, அல்பேனியா, போன்ற நாடுகள் இவ்வகை நெருக்கடிக்குள் சிக்கி புரட்சிகர அரசியல் மாற்றங்களில் பலகேள்விகள் எழுப்பியுள்ளதை நாம் அறிவோம்.

ஆகவே தேசிய விடுதலைப்போரை புரட்சிகர பாதையினூடு எடுத்துச்செல்ல வேண்டுமெனின் தேசிய எல்லைக்குள் மட்டுமே போராட்ட அடித்தளங்களை இடுவதுடன் மட்டுமே எமது இலக்குகளை வென்றெடுக்க இயலாது. தமிழ்க்கம்யூனிஸ்டுக்கள் இலங்கையின் மற்றய தேசிய இனங்களின் புரட்சிகர சக்திகளுடனும் இன்னும் சிறப்பாகக்கூறின் எமது பிராந்தியத்திலுள்ள புரட்சிகர சக்திகளுடனும் நெருங்கிய உறவுகளையும் ஐக்கியத்தையும் வலுப்படுத்துவதன் மூலமே தம்மை வலுப்படுத்தவும், தமது இலட்சியங்களை நிறைவேற்றும் திசையில் ஏகாதிபத்திய, பிராந்திய வல்லரசுகளுக்கு எதிரான போரில் தம்மை தற்காத்து நிற்கவும் இயலும். சமூகங்கள் மேலும், மேலும் சர்வதேசமயமாகி வருவதும், ஏகாதிபத்திய மேல்நிலை வல்லரசுகளின் அதிகரித்து வரும் அரசியல், பொருளாதார, கலாச்சார ரீதியிலான தலையீடுகளும், மறுகாலனியாக்கல் நடவடிக்கைகளும் உழைக்கும் வர்க்கத்தினரின் ஐக்கியத்தையம், ஒருங்கிணைந்த போராட்டத்தையும் கோரி நிற்கின்ற காலகட்டம் இது. எமது தேசிய இன விடுதலைப்போரை புரட்சிகர மாற்று தலைமை கோருவோரிடையே தனித்தேசியவாதிகளாக விளங்கும் முதலாளித்துவ தேசியவாதிகளிடமிருந்து மீட்டு உழைக்கும் வர்க்கத்தினரிடையே இன ஐக்கியத்தை சாதிக்கும் திசையில் எடுத்துச்செல்லும் பெரும்பணி தமிழ்கம்யூனிஸ்டுக்களுக்குரியது. இனரீதியான ஐக்கியத்தை உழைக்கும் வர்க்கத்தினரிடையே சாதிக்காமல் தரகுமுதலாளியத்துக்கும், அந்நிய சுரண்டலாளர்களுக்குமெதிரான போரை ஆக்கபூர்வமான திசைவழியே எடுத்துச்செல்லவியலாது.

இலங்கையின் இன்றைய இத்தகைய நிலைமை களினடிப்படையில், தமிழ்தேசிய இனப்போராட்டத்தையும், மற்றய தேசிய இனங்களிலுள்ள புரட்சிகர சக்திகளுடனான ஐக்கியத்துக்கான வேலைத்திட்டங்களையும், ஒருங்கே எடுத்துச்செல்லும் இரட்டைக் கடமையை நிறைவேற்ற வேண்டியவர்களாக தமிழ் கம்யூனிஸ்டுக்கள் உள்ளார்கள். தேசிய விடுதலைப்போராட்டத்துடன் மட்டுமே திருப்தியுறுபவர்கள் தேசியமுதலாளித்துவ வளர்ச்சி நலன்களை காண விளைபவர்களாகவே அமைந்து சமூக மாற்றத்துக்கான திசை வழியில் போராட்டத்தை விரித்துச் செல்வதற்கு பாதகம் விளைவிற்பவர்களாகவே இருப்பர். அதேபோல தேசிய விடுதலைப் போரை கையிலெடுப்பதை தவிர்ப்பவர்கள் ஈழப்பிரதேச போராட்ட அரங்கிலிருந்து அந்நியப்படும் நிலைமையே உருவாகி தேசிய இனவிடுதலையை புரட்சியின் திசையில் ➲



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எடுத்துச்செல்வதில் தவறிழைத்து பிற்போக்காளரிடம் ஒப்படைத்து விடும் தவறிக்கு காரணமாகஇருப்பர். தமிழ்கம்யூனிஸ்டுக்கள் இத்தவிர்க்கவியலாத இரட்டைப் பணியினை ஒருங்கிணைந்த வகையில் நிறைவேற்றுவதன் மூலமே தமது சொந்தத்தேசிய இனத்திற்கும், இலங்கையின் அனைத்து சமூகத்துக்குமான புரட்சிப்பாதையில் தமதுபங்கை ஆற்ற இயலும் இத்தகைய வேலைத்திட்ட அடிப்படையில் தமிழ்தேசிய இன விடுதலைப்போரை எவ்விதம் கையிலெடுக்க வியலுமென்கின்ற கேள்வி எம்முன் எழுகிறது. வர்க்கப் போராட்டம் போல புரட்சிகர வர்க்கங்களை மட்டுமே உள்ளடக்கியதாக தேசிய விடுதலைப்போராட்ட அணியை உருவாக்கிட இயலாது. குறிப்பாக ஈழப்பிரதேசங்கள் புரட்சிகர வர்க்கங்களை பலவீனமான விகிதாசாரத்தில் கொண்டுள்ள நிலைமைகளில் இத்தகைய அணுகுமுறை பலமான தேசிய விடுதலைப் போராட்ட சக்தியை உருவாக்காது. மறுதரப்பாக எதிரிவர்க்கம் நீங்கலாக அனைத்து வர்க்கங்களும் இணைந்த ஒரு ஸ்தாபனமாக தேசியவிடுதலை ஸ்தாபனம் செயற்படமுடியுமா? என்பதை நாம் பரிசீலிப்பின் முரண்நலன்களைக் கொண்ட வர்க்கங்கள் ஒரே ஸ்தாபனமாக நீடிப்பது நடைமுறையில் கடினமானது. முரண்பாடுகளின் விளைநிலமாக ஸ்தாபனம் இருக்கின்றபோது ஸ்தாபனம் முடக்கப்படுவதற்கும் சிதறிப்போவதற்குமான வாய்ப்புக்களைக் கொண்டிருக்கும். புரட்சிகர வர்க்கங்கள் எப்போதும் தமக்கான சொந்த ஸ்தாபனங்களைக் கொண்டிருத்தல் அவசியம். புரட்சிகர வர்க்கங்களின் ஸ்தாபனமாக கட்சி தொடர்ச்சியாக செயற்பட்டு வருவதற்கு அதிகூடிய முக்கியத்துவம் அளிக்கப்படவேண்டும்.

தேசிய விடுதலையில் பங்காற்றுகின்ற அனைத்து வர்க்கங்களை அணி திரட்டுவதாயும், புரட்சிகர வாக்கங்களின் அரசியலை மேலாதிக்கத்தில் நிலைபெற வைப்பதற்கு இசைவாயும் நாம் ஸ்தாபனங்களின் வடிவங்களை வடிவமைப்பதில் கவனம் கொள்ளவேண்டும். இவ்வகையில் புரட்சிகர வாக்கங்களைச் சேர்ந்த புரட்சியாளர்களைக் கொண்டு கட்டியமைக்கப்படும் கம்யூனிஸ்டுக் கட்சி அதன் நலன்களது மேலாதிக்க நிலைமை தெளிவாக நிலைபெறக்கூடிய ஒழுங்கமைப்புடன் தேசியவிடுதலையை முன்னெடுக்கின்ற பிறிதொரு ஸ்தாபனம் கட்டப்படல் வேண்டும். இவ் ஸ்தாபனம் தேசிய விடுதலையில் புரட்சிகர வர்க்கங்களின் நோக்கங்களின் ஆளுமையின் கீழ் வழிகாட்டப்படுதலில் கட்சி தொடர்ச்சியான கவனம் செலுத்திவர வேண்டும். கட்சியை புரட்சிகர வர்க்கங்களின் ஸ்தாபனமாக காத்துவருவது அதிமுக்கியத்துவத்துக்குரியது. தேசிய விடுதலை ஸ்தாபனம் முரணான வர்க்க நலன்களினால் மோதலைச் சந்திப்பினும் அதனிலுள்ள தனது வர்க்கக்கூறுகளை வழிநடாத்துவதிலும் புரட்சிகர திசைவழியே போராட்டத்தை நகர்த்துவதை உத்தரவாதப்படுத்தும் வகையிலும் கட்சியினதும், தேசிய விடுதலைக்கான ஸ்தாபனத்தினதும் உறவுகள் திட்டமிடப்படவேண்டும்.

இன்றய நிலைமையில் தமிழ்த் தேசிய விடுதலைப்போராட்டத்தில் புரட்சிகர சிந்தனையுடையோர் தலைமீடு செய்வது நடைமுறையில் சாத்தியமில்லாதுள்ளது. இன்றய போராட்டத் தலைமையான புலிகள் அமைப்பு அதை அனுமதிக்கப் போவதுமில்லை. அவர்களது அழித்தொழிப்பை மீறி புரட்சிகர சக்தி தலைமீடு செய்து வளர்ச்சி காண்பது இன்றய நிலவரங்களின் கீழ் சாத்தியப்பட முடியாத ஒன்றாக இருக்கின்றது. எதிர்காலங்களில் மாறிவரும் அரசியல் நிலைமை களுக்கேற்ப தமிழ்த் தேசிய விடுதலைக் களத்தில் செயற்படுவதற்கான வாய்ப்புகளைத் தேடுகின்ற அதேவேளையில் சமூக மாற்றத்தை எமது இறுதி இலக்காக கொண்ட நாம் இனம், மொழி, தேச, பால், வேடுபாடுகளைக் கடந்து வர்க்க அடித்தளத்தில் உழைக்கும் வர்க்கங்கள் ஐக்கியப்படுவதற்கு செயற்படுவது அவசியம். எம்வர்க்க எதிரிகள் எம்முரண்பாடுகளை கூர்மையாக்கி தமது நலன்களை தக்கவைக்கின்றார்களோ அக்கருதியல்களை முறியடித்து வர்க்க ஒற்றுமையை சாதிக்கும் திசையில் செயற்பட முனைந்து நிற்கவேண்டியது வர்க்கப் போராளிகளின் பணியாகும். இவ்வகையில் தேசிய விடுதலைப்போரில் கவனம் கொள்கின்ற சமகாலத்திலேயே மற்றய இனங்களிலுள்ள புரட்சிகர பிரிவுகளுடன் தொடர்புகளை வலுப்படுத்தும் திசையில் கவனம் செலுத்துவது அவசியமானதாகும். இலங்கைத் தீவின் மற்றய தேசிய இனப்பிரிவுகளின் அரசியல், பொருளாதார, சமூக நிலைமைகளையும் அவை எதிர்கொள்கின்ற முரண்பாடுகளையும் நாம் ஆராய்வது அவசியமானதாகும்.

மலையகத் தமிழ்த் தேசிய இனத்தைப் பொறுத்தவரையில் இலங்கைத்தீவிலேயே செறிவான தொழிலாளர் வர்க்கத்தைக் கொண்டதாக அது விளங்கு கின்றது. இனரீதியான பாகுபாட்டிற் கும், சுரண்டலுக்கும் நீண்ட காலமாக உள்ளாக்கப்பட்டு வரு கின்றது. 90 வீதமான தொழிலாளர் களைக் கொண்ட தேசியமாக அது உள்ளது. அன்றாடம் வேலைநிறுத்தங்கள், போராட்டங் களென வர்க்க முரண்பாட்டை, போராட்டத்தை அது தன்னகத்தே கொண்டுள்ளபோதும் தொடர்ச்சியாக தரகுமுதலாளியத்தின் விசுவாசி களான துரோகத் தொழிற்சங்க தலைமைகளால் ஏமாற்றப்பட்டு வருகின்றது. இன்று அந்நிய ➲



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நலன் சார்ந்த தரகுமுதலாளிய அரசினது தனியார்மயமாக்கல் நடவடிக்கைகள் மேலும் மேலும் அம்மக்களுக்கும் தனியுடமையாளருக்குமெதிரான முரண்பாட்டை ஆழமாக்கி வருகின்றன. புரட்சிகர தலைமை இம்மக்களை அணிதிரட்டும்பொது இலங்கைப்புரட்சியில் அதிமுக்கிய பங்காற்றும் தொழிலாள வர்க்க சேனையாக மலையகத் தொழிலாளர்கள் இடம்பெறுவார்கள்.

இஸ்லாமிய தமிழ்த்தேசிய இனமான முஸலீம் மக்களைப் பொறுத்தவரை, உழைக்கும் வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள் கணிசமாக மோசமான வாழ்நிலைகளுடன் உள்ளபோதும் மதத்துடன் நெருங்கியதான கலாச்சார வாழ்வு, சிந்தனைகள் பெரும்வீச்சில் வர்க்க அரசியலை நோக்கி அவர்களை ஈர்க்குமென்பதை நாம் எதிர்பார்க்க வியலாத போதிலும் ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டங்களிலும், சொந்தப் பொருளாதார போராட்டங் களிலும், தனது இன விடுதலைக் கான போராட்டங்களிலும், வீச்சுடன் பங்காற்றுபவர்களாக இருப்பார்களென எதிர்பார்க்க வியலும்.

இலங்கைத்தீவின் பெரும்பான்மை இனமாகவுள்ள சிங்களத் தேசிய இனம் பிற தேசிய இனங்களை விட பொருளாதாரம் சார்பான அரசியல் கருத்தக்களால் வழி நாடாத்தப்பட்டிருப்பதை கடந்த காலங்களில் நாம் கண்டிருக் கின்றோம். தவறான சித்தாந்தத்தால் வழிநடத்தப்பட்டபோதும் சமூக மாறுதலைக் கொண்டுவரும் என்கிற எதிர்பார்ப்புடன் பல ஆயிரம் உழைப்பாளி வர்க்க இளைஞர்கள் தம்மை அர்ப்பணித்த இரு தவறான தலைமைகளால் வழி நடாத்தப்பட்ட புரட்சிகளை நிகழ்த்திய இனமாக அது உள்ளது. தொடர்ந்தும் சிங்களப் பிரதேசங்களும், மலையகமுமே தரகு முதலாளிய அரசின் பொருளாதாரக் கொள்கைகளை, அந்நிய பல்தேசிய நிறுவனங்களின் வேட்டைக்காடாக விளங்கும் நிலையைக் கொண்ட பிரதான பிரதேசங்களாக உள்ளன. சிங்களத் தேசிய இனத்தின் முற்போக்குப் பிரிவினரிடையே இன்று கூர்மையடைந்துள்ள இன முரண்பாடு தொடர்பாக தவறான கருத்தமைவுகளும், பேரினவாதம் சார்ந்த சிந்தனைகளும் நிலவுகின்ற போதும், J.V.P போன்ற குட்டிமுதலாளிய சிந்தனை வீச்சுடைய அமைப்புக்கள் பலம் பெறுவதற்குரிய சாதகநிலைமைகள் நிலவுகின்றபோதும், தேசிய இனப்பிரச்சனைகள் தொடர்பாகவும், தமிழ்த்தேசிய இனவிடுதலைப் போராட்டத்தினை மார்க்சிய–லெனினிய சிந்தனைகளினடிப் படையில் அணுகி பிரிந்து செல்லும் உரிமையை அங்கீகரிக்கின்றதும் மற்றய தத்துவார்த்த விடயங்களில் புரட்சிகர அம்சங்களைக் கொண்டுள்ளதுமான புரட்சிகர சிந்தனையாளர்கள் உதிரிகளாகவோ, குழுவாகவோ இருப்பதற்கான வாய்ப்புக்களை நாம் முற்றாக நிராகரித்துவிடமுடியாது.

சிங்கள இனத்தில் மார்க்சிய–லெனினியத்தை ஏற்றுசெயற்படும் சக்திகள் மத்தியில் நாம் செயற்பட்டு அவர்களுடன் ஐக்கியப்படும் திசையில் இன்றுவரை செயற்பட முயற்சிக்கவில்லை என்பதே உண்மைநிலையாகும். எம்தேசிய இன நெருக்கடியின் உச்ச நிலைமையினால் இத்திசையிலான வேலைமுறையை நிராகரித்த கோட்பாட்டு ஆதிக்கத்தின் கீழ் நாம் தொடர்ந்தும் வழிநடாத்தப் படுகின்றோம். சரியான தத்துவார்த்த நிலைப்பாடுகளை வந்தடையக்கூடிய புரட்சிகர சக்திகள் உருப் பெறக்கூடிய பின்னணியை தென்னிலங்கை கொண்டுள்ளது என்பதை நாம் கவனத்திற் கொள்ளவேண்டும். இரு தவறான புரட்சிநடவடிக்கைகள், நீண்ட காலமாக இடதுசாரிக்கருத்துக்கள் பாரம்பரியம் நிலவி வருவது போன்றவை சரியான கருத்துக் களைக் கொண்ட சக்திகளை உருவாக்கம் தோற்றுவாயாக அமை கின்ற வாய்ப்புண்டு.

இக்காலகட்டத்தில் தமிழ்த் தேசிய இனத்தின் உழைக்கும் வர்க்கங்களை பிரதிநிதித்துவம் செய்வதற்கு முயன்றுவரும் நாம் தென்னிலங்கையில், மலையகத்தில், முஸ்லீம் மக்களிடையே இருக்கின்ற சிந்தனையாளர்களை, குழுக்களை அடையாளம் கண்டு, அவர்களுடன் ஐக்கியப்பட்டு ஓர் பலமான உழைக்கும் வர்க்கத்துக்கான அடிப்படையை, ஸ்தாபனத்தை இலங்கையின் இன்றய நிலைமைகளுக்கு பொருத்தமான வடிவத்தில் கட்டமைத்து இலங்கைச் சமூகத்தின் முரண்பாடுகளை புரட்சியின் நலன்களின் திசைவழியில் கையாளும் திட்டங்களை வகுத்துச் செயற்படவேண்டும். அதனூடு தேசிய இனப்பிரச்சனைகள் உட்பட்ட அனைத்து முரண்பாடுகளையும் சமூகமாற்றத்தின் திசையில் கையாளவும், தமிழ்த்தேசிய விடுதலையை தமிழ் இனத்தினது விடுதலையாக மட்டுமல்லாது இலங்கையின் அனைத்து மக்களினதும் விடுதலையை உத்தரவாதப்படுத்தும் 'புதிய ஜனநாயகப் புரட்சி' இலக்கு நோக்கி விரித்துச் செல்லவும் இயலும்.

தேசிய விடுதலையா, ஐக்கியப்பட்ட புரட்சியா என்ற கேள்வி அடிப்படையிலேயே தவறானது. இக்கேள்வி தனித்தேசியவாதிகளா? பருண்மையான நிலைமைகளைக் கணக்கிலெடுக்கத் தவறிய பழைய வறட்டுக் கம்யூனிஸ்டுக்களா? சரியானவர்களென வாதிப்பதற்கு சமமானது. தேசிய நலன்களை, சர்வதேசிய நலன்களுடன் இணைத்து முன்னெடுப்பவர்களே உண்மையான கம்யூனிஸ்டுக்களாவர். இவர்களே யதார்த்தத்தில் உழைக்கும் வர்க்கத்தினரின் நலன்களைப் பூர்த்தி செய்கின்றனர். நடைமுறையில் இவ்விரு பணிகளில் எவை சாதிப்பதற்கு சாத்தியமாக இருக்கின்றதோ அதிலிருந்து ஆரம்பித்து இரண்டையும் ➲



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நிறைவேற்ற முயல்வதே எமது பணியாகும். தேசிய விடுதலை அரங்கில் செயற்படும் சாத்தியங்களை பயன்படுத்தம் அதேவேளை மற்றய இனங்களின் புரட்சிகரப் பிரிவுகளை நோக்கி வேலைசெய்யவும், இலங்கைதழுவிய அளவில் தரகுமுதலாளிய எதிர்ப்பு, அதிகரித்துவரும் அந்நியமாக்கல், சுரண்டலுக்கெதிரான, ஏகாதிபத்திய எதிர்ப்பு நடவடிக்கையில் இணைந்துகொள்ளவும் வேண்டும். தேசிய விடுதலை, வர்க்க நலன்களினடிப்படையிலான ஐக்கியம் இரண்டும் சமகாலத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய நடைமுறையை நிறைவேற்றுவதே தமிழ்க் கம்யூனிஸ்டுக்களின் இன்றய கடமையாகும்.

குறிப்பு: ஈழப்பிரதேசத்தில் பரவலாகக் காணப்பட்ட குட்டிமுதலாளிய சிந்தனையின் வீச்சு, அங்கு தோன்றிய மாக்சிய-லெனினிய சிந்தனையின் வழிப்பட்ட ஸ்தாபனங்களில் நிலவியதையும் அவ்ஸ்தாபனங்கள் முற்றாக நிலைகுலைந்து போனதற்கும் அவ்விஸ்தாபனங்களின் தலைமையிலிருந்த நபர்களது குட்டிமுதலாளிய சிந்தனை வகைப்பட்ட இயல்புகளுக்கும் தொடர்பிருப்பதற்குமான சாத்தியங்கள் நாம் கவனத்தில் குறித்துக்கொள்ளவேண்டிய ஒன்று.

ஈழத்தில் நெருக்கடிகளை, பற்றாக்குறைகளை எதிர்நோக்கிய மக்களும், தரகுமுதலாளிய அரசின் பொருளாதார கொள்கைகளுக்குமிடையேயான முரண்பாடு அதாவது விவசாயிகளுக்கும்-தரகுமுதலாளிகளுக்கும், வேலையற்றோருக்கும்-அரசிற்குமிடையேயான முரண்பாடு (சாராம்சத்தில் தரகுமுதலாளிகளுக்கும்) வெளிநாட்டு வேலைவாய்ப்பு முலம் திசைதிருப்பப்பட்டது கவனத்துக்குரியது. வெளிநாடுகளில் வேலைவாய்ப்பு, அதைத்தொடர்ந்து பெரும் எண்ணிக்கையில் செல்வந்தநாடுகளுக்கு புலம்பெயர்வு ஈழத்தின் வர்க்க அடுக்குகள் மேல் குட்டிமுதலாளிய சிந்தனை வீச்சை ஒரு திரையாகப் படரவைத்துள்ளதையும் சமூகத்தின் வர்க்க கீழடுக்குகளிலிருந்த, தாழ்த்தப்பட்ட சமூகத்தினரைச் சேர்ந்தோரிடையேயும் குறைந்த அளவிலேனும் மாறுதல்களை குடாநாடு, வன்னிப்பகுதிகளில் கொண்டுவந்துள்ளதை, குட்டிமுதலாளிய சிந்தனைத் தாக்கத்தை அதிகரித்துள்ளதைக் கருத்தில் கொள்ளவேண்டும். இதைக் கருத்திற்கொண்டு, எனது கட்டுரையில் புரட்சிகர வர்க்கக்கூறுகளை ஈழப்பகுதியில் மிகக்குறைந்த வீதத்தில் கணிப்பிடமுயன்றுள்ளேன். கூடிய மதிப்பீடு செய்வது தவிர்க்கப்படுதல் கருதி இவ்வகையில் அணுகினேன். எனினும் கூலிவிவசாயிகள், சாதிவாரியாக தாழ்த்தப்பட்ட சமூகங்களிடையே புரட்சிகர வர்க்கக் கூறுகள் கணிசமான அளவில் புரட்சியின் வர்க்க அடிப்படையாக விளங்கும் நிலைமைகள் உள்ளன.

☐ இக்கட்டுரையானது துல்லியமான தகவல்கள், கணிப்பீடுகளிலிருந்து எழுதப்பட்டதல்ல. கருத்துகளை பரிமாறவும், இன்றய நிலைமைகளை விவாதிக்கவும் என்ற நோக்கில் மேலோட்டமான எனது கண்ணோட்டம், மதிப்பீடுகளிலிருந்து எனது கருத்தை முன்வைக்கும் நோக்கில் எழுதப்பட்டுள்ளது. பொதுவான இலக்குகள் உடன்பாடானவையாக அமையும்போது இலங்கையின் குறிப்பான சமூக நிலைமைகள், முரண்பாடுகள் துல்லியமாக மதிப்பிடப்பட்டு ஆராயப்படுதல் தொடர்ந்த தேவையாகும்.

வசந்தகுமாரன்
15.10.94.

இக்கட்டுரை எமது சமூகத்தின்மீது வர்க்க ஆய்வைக்கோரி நிற்கிறது. அந்தவகையில் சமர் பின்வரும் புள்ளிவிபரங்களை இணைத்துள்ளது. இதில் எமக்குக்கிடைத்த பலதரப்பட்ட புள்ளிவிபரங்களை உங்கள் பார்வைக்கு முன்வைக்கிறோம். எமது போராட்டத்திலும் சரி, இலங்கை வரலாற்றிலும் சரி ஒரு வர்க்க ஆய்வு செய்யப்படவில்லை. குறைந்தது முதலாளித்துவ புள்ளிவிபர அடிப்படையிலும் கூட தொகுக்கப்படவில்லை. இது எம்போராட்டத்தை பெருமளவு பாதித்துவருன்கிறது. இதைக் களையவேண்டின், நாம் ஒரு வர்க்க ஆய்வை செய்யவேண்டியுள்ளது. அதற்கான வகையில் நாம் பலதரப்பட்ட தரவுகளையும், கட்டுரைகளையும் வரவேற்கின்றோம்.

ஈழப்போராட்டம் தொடங்கியபின் வர்க்கங்களுக்கிடையில் பாரிய மாற்றம் நிகழ்ந்துள்ளது. 2-லட்சத்திற்கும் மேற்பட்டோர் மேற்குநாடுகளுக்கு புலம்பெயர்ந்ததைத் தொடர்ந்து அவர்களின் வர்க்கத்தட்டு மேல்மத்தியதர வர்க்கத்தட்டுக்கு நகர்ந்துள்ளது. இவ் 2-லட்சம் பேர் மொத்தத்தில் எம்மண்ணில் 5-6 லட்சம்பேரை அதைநோக்கி நகர்த்தியுள்ளனர். இது ஒருபுறம் உயர்ந்தநிலையை அடைந்த நிலைகளில் மற்றுமொரு மக்கள் கூட்டம் அன்றாட உழைப்பையும், இருந்த சொத்துக்களையும் இழந்து அடிமட்டத்திற்கு சென்றுள்ளனர். ஒருபுறம் உயர்ச்சி, மறுபுறம் தாழ்ச்சியென மக்கள்கூட்டம் இரண்டு பகுதிகளாக பிரிந்து அவ்வவ் வழிகளில் தீவிரப்பட்டுள்ளனர்.

இந்தவகையில், நாம் இப் புள்ளிவிபரத்தை உங்கள் பார்வைக்குக் கொண்டுவருகிறோம். இது உங்கள் சிந்தனையை அதையொட்டி உங்களை ஆய்வு செய்யவும் தூண்டுமெனக் கருதுகின்றோம். உங்கள் கருத்துக்களை வரவேற்கின்றோம்.

-சமர் ஆசிரியர் குழு-

இலங்கையில் 10-14 வயதுடைய 5 பேரில் ஒருவர் பாடசாலை செல்லவில்லை.

---

19 லட்சம் குழந்தைகளில்
2.50.000 பேர் சாதாரணவேலையில் ஈடுபடுகின்றனர்.
1.10.000 பேர் அகதிமுகாமில் உள்ளனர்.
20.000 பேர் ஒப்பந்தவேலையில் உள்ளனர்.

10.000 பேர் ரோட்டில் வசிக்கின்றனர்.

---

இனப்போராட்டத்தில் மொத்தமாக 9.717 இராணுவ வீரர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.
இதில் 363 பேர் அதிகாரி அந்தஸ்து உடையோராவர்.

---

இனப்போராட்டத்தில் மொத்தமாக 60.000 ➲



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தமிழ்மக்கள் கொல்லப்பட்டுள்ளனர். 5.000 பேரைக் காணவில்லை. வடக்குக் கிழக்கில் நாளொன்றுக்கு எல்லாத்தரப்புமாக 40 பேர் இறக்கின்றனர்.

---

பாதுகாப்பு வரி 1991 இல் 01 வீதம்
பாதுகாப்பு வரி 1993 ஆரம்பத்தில் 03 வீதம்
1993 இறுதியில் 3.5 வீதம் மாக அதிகரிக்கப்பட்டு இதன் மூலம் எதிர்பார்க்கப்பட்ட பணம் 1225 மில்லியன் ரூபாய்களாகும்.

---

முல்லைத்தீவு மொத்த மக்கள் தொகை:- 1.32.174.
இதில் அகதிகள் முகாமில் உள்ளோர்:- 29.190.

| ஆண்டு. | 1987. | 1993. |
|---|---|---|
| மரண வீதம். | 3.17 வீதம் | 14.5 வீதம் |

---

மட்டக்களப்பு, வவுனியா, திருகோணமலை, அம்மாறை, மன்னார் மொத்த அகதிகள்
Camb இல்:- 2.33.000
வெளியில்:- 3.42.000

---

1994 மார்ச் தமிழ்நாட்டில் அகதிகள்:- Camb:- 78.396
வெளியில்- 92.000
1992 திருப்பி அனுப்பப்பட்டோர்:- 29.103

---

யாழ்ப்பாணத்தில் மொத்த அகதிகள் 2.65.091 இது 80.271 குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் ஆவர்.
இதில் Camb இல் உள்ளோர் 1.18.143 பேர் இது 30.105 குடும். சேர்ந்தவர்கள்
வெளியில் உள்ளோர் 1.47.758 பேர் இது 50.160 குடும். சேர்தவர்கள்.
90.000 குடும்பங்கள் மீன்பிடித் தொழிலை இழந்துள்ளனர்.

---

1982 முதல் 1993 வரை இங்கிலாந்தில் அகதிகள் புகலிடம் கோரியோர்:- 18.230பேர்.
1993ல் மட்டும் கனடாவில் அகதிகள் புகலிடம் கோரியோர்:- 3.773 பேர்.
மொத்த சுவீஸ் அகதிகள் 30.000 பேர்.
ஐ.மேற்க்கு நாடுகளுக்கு புலம் பெயர்ந்த தமிழ்பேசும் மக்களின் தொகை 2-லட்சத்திற்கும் அதிகமாகும் எனக் குறிப்பிடத்தக்கது.

---

1993 மட்டக்களப்பு அகதிகள் தொகை- 70.205 இது 16.907 குடும். சேர்ந்தோர்.
இதில் Camb இல் உள்ளோர் 7.431 பேர்.
வெளியில் உள்ளேர் 62.774 பேர்.
இலங்கை முழுவதும் 6.13.363 பேர் அகதிகளாகவுள்ளனர்.
இதில் Camb இல் உள்ளோர் 2.56.698.
வெளியிலுள்ளேர் 3.56.765.

---

1993 தை தமிழ்பேசுவோர் சிறைகளில்.

பூசா, Pelawatt, Weeravile:- 982 பேர்
Colombo, Kalutara :- 1.166 பேர்
மத்திய சிறைகளில் :- 1.060 பேர்

---

1980 வேலைநிறுத்தத்தில், வேலை நீக்கப்பட்டோர்:- 80.000 பேர்

---

**இலங்கையின் வரவு, செலவு சிலவற்றின் ஒதுக்கீடுகள்.**

| ஆண்டு. | 1990 | 1991. |
|---|---|---|
| பொதுவான மக்கள் சேவை. | 13.5 வீதம் | 7.5வீதம் |
| மருத்துவம். | 4.8 | 3.4 |
| கல்வி. | 3.9 | 3.6 |
| Social ser | 11.3 | 9.1 |
| வீடு. | 1.9 | 1.6 |

---

இலங்கையின் மொத்த வருமானத்தில் 40ஃ யுத்தத்திற்கு பயன்படுத்தப்படுகிறது.
1978ல் பாதுகாப்புச் செலவு :- 560 மில்லியன்.
1986ல் -„- செலவு:- 8.855 மில்லியன்.
1992ல் -„- செலவு:- 16 பில்லியன்
1993ல் -„- செலவு:- 19.8 பில்லியன். மேலதிக கோரிக்கையாக 8 பில்லியன் கோரப்பட்டது.

---

1992 ஐரோப்(EC) பின் ஏற்றுமதி- 617 M Ecu.
1992 -„- இறக்குமதி- 451 M Ecu.
இலங்கைக்கு ஏற்பட்ட நட்டம்- 166 M Ecu.

---

வாழ்க்கைச் செலவு 1993 மே- 10 வீதம்
1993 ஜூன்- 12.3 வீதம்

---

1980 இராணுவ எண்ணிக்கை:- 15.000 பேர்.
1985 இராணுவ எண்ணிக்கை:- 21.560 பேர்.
தற்காலிகமான 18.200. பொலிஸ் 14.500 பேர்.
பாராளுமன்ற உறுப்பினா பாதுகாப்பு 5.000 பேர்.
தற்போது

| | |
|---|---|
| இராணுவம் | 10.000 |
| Navy | 10.000 |
| விமானப்படை | 8.000 |
| பொலிஸ் | 30.000 |
| கொரில எதிர்ப்புப்படை | 12.000 |
| NAF | 15.000 |
| Desertd | 10.000 |
| Pardoned | 3.000 |

வடக்கில் மொத்த இராணுவ எண்ணிக்கை 1993 கடைசி 35.000 பேர்.

---

கடந்த நான்குவருடப் போரில் யாழ்.குடாநாட்டில் மட்டும் 7.542 பொதுமக்கள் கொல்லப்பட்டனர். ➲



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

2.590 பேர் ஊனமுற்றனர்
1981ல் யாழ்.குடாநாட்டு சனத்தொகை:- 7.38.788 பேர்.
1984ல் -,,- சனத்தொகை:- 7.50.000 பேர்.
யாழ்.குடாநாட்டை விட்டு வெளியேறியோர்:- 1.50.000 பேர்.

---

☐ 65.000 விவசாயிகள் மின்சாரமின்றி நீர் இறைக்கமுடியாது விவசாயத்தைக் கைவிட்டனர்.

☐ 24.000 குடும்பங்கள் மீன்பிடித் தொழிலை கைவிட்டுள்ளனர்.
இலங்கையின் மீன்பிடித் தேவையின் 30 வீதத்தை யாழ்.குடாநாடு வழங்கி வந்தது குறிப்பிடத்தக்கது. 1990ல் யாழ் மாவட்டத்தில் 822 உள்ளக இயந்திரப் படகும் 1928 வெளியக இயந்திரப் படகும் இருந்தன. இன்று யாழ் மாவட்டத்தில் 649 உள்ளக இயந்திரப் படகும் 2765 வெளியக இயந்திரப் படகும் சிதைந்தள்ளது. அதாவது அனேகமாக முழுதாக அழிக்கப்பட்டுவிட்டது.

☐ 1990ல் 1661 தொழில் நிறுவனங்கள் இருந்தன.
561 குடிசைக் கைத்தொழில் இருந்தன.
1084 சேவைத் தொழில்கள் இருந்தன.
இதில் 70 வீதம் இன்று முற்றாகவே மூடப்பட்டுள்ளன.

☐ கட்டிடவேலை, திருத்த வேலைகளில் ஈடுபட்டிருந்த 6.000 பேர் வேலைகளை முற்றாக இழந்துள்ளனர்.

☐ யாழ் மாவட்டத்தில் விவசாயத்தில் 42 வீதமானோர் ஈடுபட்டனர்
-,,- தொழில்துறையில் 28 வீதமானோர் ஈடுபட்டனர்.
-,,- சேவைத்துறையில் 35வீதமானோர் ஈடுபட்டனர்.

☐ யாழ். மாவட்டத்தில் 1.03.000 ஹெக் டெயர் நிலப்பரப்பைக் கொண்ட யாழ் மாவட்டத்தில் 39.75வீதம் மட்டுமே விவசாயத்திற்கப் பயன்படுத்தப்பட்டது.

☐ யாழ் மாவட்டத்தில் மழையை நம்பி 12.000 ஹெக்டெயர் நிலப்பரப்பு நெற்செய்கையில் இருந்தது.

தற்பொழுது 9.135 ஹெக்டெயர் நிலப்பரப்பு மட்டுமே செய்கை பண்ணப்படுகிறது.

☐ யாழ் மாவட்டத்தில் 1992ல் 4.082 ஹெக்டெயர் நிலப்பரப்பில் வெங்காயம் செய்கை பண்ணப்பட்டது. தற்போது 25% மட்டுமே செய்கை பண்ணப்படுகின்றது.

☐ யாழ் மாவட்டத்தில் 10 ஆண்டுகளில் மிளகாய் செய்கை 84.4% விழுக்காடு கண்டுள்ளது.

☐ 231 ஹெக்டெயர் நிலத்தில் செய்கை பண்ணப்பட்ட முந்திரிகை 22 ஹெக்டெயராகக் குறைந்துள்ளது.

☐ 1982ல் 43.350 மெற்றிக் தொன் மீன் உற்பத்தியைச் செய்த யாழ்.குடாநாடு 1991ல் 1.111 மெற்றிக் தொனாகக் குறைந்தது. 1994ல் முற்றாக மீன்பிடி நின்றுபோயுள்ளது. யாழ்.குடாநாட்டுக்குத் தேவையான 6.000 மெற்றிக் தொன் ஐ கூட உற்பத்திசெய்ய முடியாதுபோய் உள்ளது.
மீன்பிடியில் இருந்த 1.07.177 பேரில் 75வீதமானோர் இன்று எந்தவருமானமுமின்றி உள்ளனர்.

☐ யாழ் மாவட்டத்துக்கு பிற மாவட்டங்களிலிருந்து 6.186 குடும்பங்கள் புலம் பெயர்ந்துள்ளனர்.

☐யாழ்.மாவட்டத்தில் இடம் பெயர்ந்த 66.000 குடும்பங்களின் பிள்ளைகள் பாடசாலை வசதியின்றி உள்ளனர்.

☐ அரிசித் தேவையின் 10வீதம் மட்டுமே யாழ்.குடாநாடு இன்று உற்பத்திசெய்கிறது.

☐யாழ் மாவட்டத்தில் 5 வயதிற்கு உட்பட்டோரின் போஷாக்கின்மை 67.75 வீதமுமாக உயர்ந்துள்ளது.

---

1974 காரைநகரில் உள்ள தோப்பக்காடு கிராமத்தில் செய்யப்பட்ட ஆய்வுகளிலிருந்து சில தகவல்களைச் சுருக்கித்தருகின்றோம். இவ் ஆய்வை NORWAY சில முதலீடுகள் இட்டபோது, NORWAY தனது நலன்களின் அடிப்படையில் செய்தது குறிப்பிடத்தக்கது.

☐ காரைநகர் மொத்த சனத்தொகை:- 18.000 பேர்.
☐ 1972ல் காரைநகர் ஆண்களின் தொழில்.

| வேலைகள். | வேலையாட்களின் எண்ணிக்கை. | சனத்தொகையில் வேலைபார்க்கும் ஆண்கள். | மொத்த சனத்தொகையில் வீதம் (18.000) |
|---|---|---|---|
| விவசாயிகள். | 619 | 18 வீதம் | 3 வீதம் |
| அரசாஉத்தியோகம். | 610 | 18 வீதம் | 3 வீதம் |
| வியாபாரிகள். | 557 | 16 வீதம் | 3 வீதம் |
| சிறுகைத்தொழிலில். | 317 | 9 வீதம் | 2 வீதம் |
| மீன்பிடிப்போர். | 269 | 8 வீதம் | 1 வீதம் |
| குடிமை தொழில். | 117 | 3 வீதம் | 1 வீதம் |
| கூலியாட்கள். | 928 | 27 வீதம் | 5 வீதம் |
| மொத்தம். | 3.417 | 99 வீதம் | 99 வீதம் |



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

☐காரைநகரில் ஒருவரின் உழைப்பில் 5.5 பேர் தங்கி வாழ்ந்தனர். இதில் பெண் உழைப்பைச் சேர்க்காது கணிப்பிடப்பட்டது.

காரைநகர் மொத்த சனத்தொகையில் 6.000 பேர் கூலித் தொழிலாளர்களாக உள்ளனர். 2.000 பேர் சிறு கைத்தொழிலாளராகவும், 600 பேர் குடிமை தொழிலிலும் உள்ளனர்.

மொத்த காரைநகர் சனத்தொகையில் அரை வாசிப்பேர் கூடுதலாக அடிமட்டத்தில் உள்ளனர். 40 வீதமானோர் மத்தியதரத்தில் இருந்தனர்.

தோப்புக்காடு முக்கியவேலை-பால், சாதி ரீதியாக 1974 (வீதம்).

| தொழில். | திமிலர். ஆண் - பெண். | பள்ளர். ஆண் - பெண். | மொத்தம். |
|---|---|---|---|
| வீட்டுவேலை. | 0 - 75 | 0 - 25 | 28 |
| கூலிவேலை. | 0 - 3 | 69 - 65 | 27 |
| தொழில்சாலை வேலை. | 32 - 11 | 1 - 9 | 13 |
| மீன்பிடித் தொழில். | 16 - 0 | 8 - 0 | 7 |
| அரசாங்.வேலை. | 14 - 1 | 1 - 0 | 5 |
| படகுவேலை | 13 - 3 | 0 - 0 | 4 |
| ஏனையோர் (மாணவர், ஓய்வுபெற்றோர்) | 25 - 8 | 22- 1 | 16 |
| மொத்தம். | 100 - 101 | 101 - 100 | 100 |
| மொத்த எண்ணிக்கை. | 162- 184 | 118 - 118 | 582 |

☐ 1974 தோப்புக்காடு சம்பளம்.

| ரூபாய் (மாதம்) | ஆண்கள்.(வீதம்) | தோப்புக்காடு வீதம் | பெண்கள் வீதம் | எல்லாம் முழு வீதம் |
|---|---|---|---|---|
| 30-70 | -------- | ------- | 5 | 5 |
| 71-110 | -------- | ------ | 46 | 51 |
| 111-150 | 8 | 8 | 26 | -------- |
| 151-190 | 18 | 26 | 14 | 91 |
| 191-230 | 39 | 65 | 9 | 100 |
| 231-270 | 29 | 94 | --------- | -------- |
| 271- | 6 | 100 | --------- | --------- |

☐தோப்புக்காடு சீதனத்தின் அளவு -சாதிரீதியாக(வீதம்)

| | திமிலர் | பள்ளர் |
|---|---|---|
| காணி(1/24 முதல் 1/6 ஏக்கர் வரை) | 12 | 07 |
| 100-1000 ரூபாய் | 04 | 13 |
| 1000-2000 ரூபாய் | 12 | 07 |
| 2100-4000 ரூபாய் | 4 | 0 |
| 4000 க்கு மேல் | 7 | 0 |
| ஏதாவது சீதனம் இருத்தல் | 39 | 27 |
| எதுவித சீதனமும் இல்லை | 39 | 56 |
| தகவல் இல்லை | 21 | 17 |
| மொத்தம் | 99 | 100 |

கேட்கப்பட்ட பெண்களின் மொத்தத் தொகை

☐ நிலவுடமை சாதிரீதியாக

| | திமிலர் | பள்ளர் |
|---|---|---|
| நிலவுடமையற்றோர் | 13 | 63 |
| 1/12ஏக்கர் நிலத்தைவிடக் குறைவு | 38 | 22 |
| 1/8 தொடக்கம் 1/6 ஏக்கர் | 45 | 11 |
| ½ தொடக்கம் 2/3 ஏக்கர் | 03 | 02 |
| தகவல் இல்லை | 1 | 1 |
| மொத்தம் | 100 | 100 |
| வீடுகளின் மொத்தத் தொகை | 117 | 92 |

☐ ஏனைய பொருளாதார வளங்கள் சாதிரீதியாக

| காலநடைகள் | திமிலர் | பள்ளர் |
|---|---|---|
| ஆடுகள் (1-4) | 38 | 34 |
| பசு மாடுகள் (1-3) | 6 | 2 |
| கோழிகள் (1-6) | 56 | 33 |
| **படகுகள்** | | |
| தோணி | 6 | 0 |
| வள்ளம் | 0 | 7 |
| கட்டுமரம் | 10 | 0 |
| **மீன்பிடிச்சாதனங்கள்** | | |
| கண் வலை | 3 | 0 |
| ஏனைய வலைகள் | 4 | 1 |
| கரப்பு | 4 | 7 |



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

| வீட்டுவசதி சாதிரீதியாக | | |
|---|---|---|
| மிகவறிய(ஓலைக் குடிசை) | 1 | 20 |
| வறிய(ஓலைக்குடிசை, மண் நிலம்) | 14 | 48 |
| இடைத்தரம் | 43 | 20 |
| நல்லவை (மண் குடிசை) | 27 | 5 |
| மிக நல்லவை (கல்வீடு, ஓடுகள்) | 15 | 6 |
| மொத்தம் | 100 | 99 |
| **வீட்டு உபகரணங்கள் தளபாடங்கள்** | | |
| கதிரை | 45 | 9 |
| மேசை | 47 | 5 |
| அலுமாரி | 79 | 49 |
| கட்டில் | 32 | 25 |
| **அறைகள்** | | |
| ஒரு அறை | 22 | 53 |
| இரண்டு அறைகள் | 52 | 39 |
| மூன்று அல்லது அதற்கு மேல் | 26 | 8 |
| **வேறு சொத்துக்கள்** | | |
| வேலி | 79 | 72 |
| கக்கூசு | 6 | 0 |

**பாடசாலை செல்லல் சாதி, பால் ரீதியாக வீதம்**

| பாடசாலை சென்ற ஆண்டுகள் | திமிலர் ஆண்- பெண் | பள்ளர் ஆண்-பெண் |
|---|---|---|
| 2ம் ஆண்டுகள் அல்லது அதிலும் குறைவு | 8- 19 | 53-71 |
| 3-6ஆண்டுகள் | 32-52 | 42-25 |
| 7-10 ஆண்டுகள் | 49-29 | 3- 4 |
| 11 அல்லது அதற்கு கூட | 7-0 | 1- 0 |
| மொத்தம் | 99-100 | 99-100 |
| பதில் அளித்தோர் மொத்த எண்ணிக்கை | 162-184 | 118-118 |
| | | |

கிராமத்தில் 5 ஆண்டுகள் அல்லது அதற்கு கூடுதலாக பாடசாலை சென்றோர் சாதி, பால் வயது அடிப்படையில்

| வயதுப்பிரிவு | திமிலர் ஆண்- | பெண் | பள்ளர் ஆண்- | பெண் |
|---|---|---|---|---|
| 18-29 வயதுகள் | 90 | 55 | 5 | 6 |
| 30-39 -,- | 51 | 28 | 6 | 2 |
| 50 வயதுக்கு மேல் | 32 | 12 | 3 | 0 |
| பதிலளித்தோர் எண்ணிக்கை | 162 | 184 | 118 | 118 |

சிசு மரணம் தாயின் வயது சாதியடிப்படையில்

| தாயின் வயது | திமில சமூகப் பிள்ளைகள் | பள்ள சமூகப் பிள்ளைகள் |
|---|---|---|
| 18 - 29 வருடங்கள் | 12 வீதம் | 32 வீதம் |
| 30 - 49 வருடங்கள் | 19 வீதம் | 22 வீதம் |

பள்ள சமூகத்தை சேர்ந்த ஒரு தாய் 4.7 குழந்தைகளைப் பெற்று அதில் 1.4 குழந்தைகளை 6 வருடத்தில் இழக்கிறாள்.

திமில சமூகத்தை சேர்ந்த ஒரு தாய் 4.7 குழந்தைகளைப் பெற்று அதில் 1.1 குழந்தைகளை 6 வருடத்தில் இழக்கிறாள்.

4.7 வீதம் பள்ளர் வீதம் கூடுதலாக மாறும் நிலையில் இருந்தது குறிப்பிடத்தக்கது.

## 2ம் உலக மகா யுத்தத்தின் 50 வது [illegible] மறைக்கப்பட்டு வரும் உண்மைகள்

**சென்ற இதழ் தொடர்ச்சி**

ஆக்கிரமிப்புக்கு வசதிசெய்யும் வகையில் 1933 மார்ச் 27.ல் சர்வதேச சங்கத்திலிருந்து வெளியேறியது. பின் 1934ல் கடற்படை ஆயுதந்தரித்தலைப் பற்றிய வாஷிங்டன் மகாநாடு(1921-1922) உடன்படிக்கையை நிராகரித்தது. 1936 நவம்பர் 25.ல் "கம்யூனிஸ அகில எதிர்ப்பு உடன்படிக்கையை" செய்துகொண்டது. 1940 செப்ரம்பர் 27ம் திகதி ஜெர்மனி-இத்தாலியுடன் "முத்தரப்பு உடன்படிக்கையை" செய்து கொண்டது ஜப்பானிய யுத்தத் தயாரிப்புக்கள் நிகழ்ந்தபோது இவ் மேற்கு நாடுகள் அதை சோவியத்தின்பால் ➲



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

திருப்பவும், அந்நாட்டுக்குத் தேவையான அனைத்து உதவிகளையும் செய்து ஊக்குவித்தன. யுத்தக் குற்றவாளிகளில் இவ் மேற்கு நாடுகளின் பங்கு கணிசமானது என்பதை நடைபெற்ற நிகழ்ச்சிகள், புள்ளி விபரங்கள் நிரூபிக்கின்றன.

"மூனில் சதி"யைத் தொடர்ந்து சோவியத் செக்கோஸ் லொவாக்கியாவிற்கு உதவும் வகையில் 76 துப்பாக்கிப்படை, மற்றும் குதிரை டிவிஷன்களும், 3 டாங்கி கோர்பஸ்களும், 22 தனி டாங்கி பிரிகேடுகளும், 12 விமான பிரிகேடுகளும் தயாராக வைத்திருந்தன. இருந்தபோதும் செக்கோஸ்லொவாக்கியா இதை ஏற்றுக்கொள்ள மறுக்குமாறு பிரிட்டன், பிரான்ஸ், ஆகியவை நிர்ப்பந்தித்து ஜெர்மனி ஆக்கிரமிக்க வழி அமைத்தன.

1936–39களில் ஸ்பெயின்மக்கள் நடத்திய தேசிய புரட்சியில் 3000க்கும் மேற்பட்ட சோவியத்தின் பல்வேறு வீரர்கள் இணைந்துநின்று போராடினர். இதில் பாஸிச சக்திகளுக்கு எதிராகவும், ஜெர்மன், இத்தாலி ஆக்கிரமிப்புக்கு எதிராகவும் போராடிப் பெரும்புகழ் பெற்றனர். 1939ல் மங்கோலியாவினுள் ஜப்பான் நுழைந்தபோது சோவியத் படைகள் உதவிக்குவந்து ஜப்பானைத் தோற்கடித்து மங்கோலியாவைக் காப்பாற்றினர்.

1937ல் சோவித்–சீனா பரஸ்பரம் தாக்குவதில்லை என்ற ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர். அத்துடன் சீனா மீதான ஜப்பானிய தாக்குதலின்போது அதாவது 1937 முதல் 1941வரை தேசிய விடுதலைக்கு உதவும் வகையில் 940 பீரங்கிகளையும், 100 டாங்கியையும், 885 விமானங்களையும், மற்றும் சில ஆயிரம் துப்பாக்கிகளையும், 4000ற்கு மேற்பட்ட சோவியத் ஆலோசனைகளையும் வழங்கியது. சோவியத் விமானிகள் சீனாப்பரப்பில் ஜப்பானிய 100 விமானங்களைச் சுட்டுவிழ்த்தினர்.

பாஸிசத்தை எதிர்கொள்ள சோவியத் 1939 ஏப்பிரல் 27ல் கூட்டு உடன்பாட்டுக்கு பிரிட்டிஷ், பிரான்ஸ்க்கு அழைப்புவிட்டனர். அதற்கான ஒரு விரிவான திட்டத்தை முன்வைத்தனர். இந்த நோக்கத்தோடு 1939 ஓகஸ்ட் மாதம் பிரிட்டிஸ், பிரான்ஸ், சோவியத் என்பன சோவியத்யூனியனில் பேச்சுக்களை நடத்தின. இதை எதிர்கொள்ள சோவியத் தரப்பில் கலந்துகொண் டவர்களுக்கு பரவலான அதிகாரம் இருந்ததுடன், யுத்தத்தைத் தடுக்க 136 காலாட்படை, மற்றும் கதிரை டிவிஷன்களையும் , 5,000 கனரக பீரங்கிகளையும், 10ஆயிரம் டாங்கிகளையும், 5,50 0 போர் விமானங்களையும் வழங்கத் தயாராகவிருந்தது. இவ்வளவு இருந்தும் பிரிட்டிஷ் தூதுக்குழுவிற்கு கையொப்பமிட அதிகாரம் இருக்கவில்லை. இது அடிப்படையில் சோவியத்தின்பால் கொண்ட வெறுப்பில் பாஸிசத்தை ஆதரிப்பதில் போய்நின்றது. இது குறித்து பிரிட்டிஷ் அரசியல்வாதியான டே. லாயிட் ஜார்ஜ் கேலியாகக் கூறியதைப் பார்ப்போம்.

«ஹிட்லருடன் கொஞ்சிக்குலாவ சேம்பர்லோன் மூன்று முறை தொடர்ந்தாற் போல் சென்றார். முசோலினியைக் கட்டித் தழுவவும் அபிஸ்ஸீனியாவைக் கைப்பற்றியதற்காக எமது அதிகாரபூர்வமான அங்கீகார வடிவில் பரிசளிக்கவும் அவர் ஸ்பெயினில் தலையிடுவதற்கும் நாங்கள் எந்தவிதத்திலும் தடையாக இருக்கமாட்டோம் என்று சொல்லவும் சோம்பர்லோன் விசேஷமாக ரோமிற்கு சென்றார். தனது உதவியை நமக்கு முன்மொழியும் அதிக வல்லமை வாய்ந்த ஒரு நாட்டிற்கு நம்மை பிரதிநிதித்துவப்படுத்த அந்நிய அமைச்சரகத்திலிருந்து அதிகாரியை அனுப்பினார்கள் என்று ஏன் கூறவேண்டும்? இதற்கு ஒரே ஒரு விடை மட்டுமே இருக்க முடியும்: கனவான் நேவில் சோம்பர்லோன், லார்ட் ஹாலிபாக்ஸ் மற்றும் சர் சைமன் ஆகியோருக்கு ரஷ்யாவுடன் கூட்டுச்சேர விருப்பமில்லை.»

–w. Coates, Z. Coates, A History of Anglo-Soviet Relations, London, 1945 P614–

இந்த வகையில் சோவியத்தின் பாலான எதிர்ப்பும், பின் சோவியத்துடன் ஏற்பட்ட ஒப்பந்தத்தின் பின்னர்கூட இரண்டாவது போர்முனையைத் தொடங்கும் வரை 3 வருடங்களாக இருந்து அடித்து 1944ல் சோவியத்தின் முன்னேறிய வெற்றியுடன் போட்டியிடவே படைகளை இறக்க நிர்பந்திக்கப்பட்டனர். சோவியத்யூனியனுடன் அதிகாரம் இல்லாதவர்கள் பேசிக்கொண்டிருந்த அதேநேரம் பிரிட்டிஷ் அரசாங்கம் ஜெர்மனியுடன் இரகசிய பேச்சுவார்த்தையில் ஈடுபட்டது.

இப் பேச்சுவார்தையின் ஊடாக உலகை சமாதானமாக பங்கு போட்டுக் கொள்ளவும், போலந்தில் தலையிட மாட்டோம் என ஒப்புக்கொண்டும், சோவியத்தை எப்படி பங்குபோடுவது என்ற சமாச்சாரங்களே பேச்சவார்தையின் சாரமாக இருந்தது. இதேநேரம் பிரிட்டிஷ், பிரான்ஸ், சோவியத் பேச்சுவார்த்தையை குலைத்ததன் மூலம் பாஸிச 2ம் உலக யுத்தத்தை தடுக்கும் கடைசி சந்தர்ப்பம் இழக்கப்பட்டது. இது தொடர்பாக பிரிட்டிஷ் இராணுவ வரலாற்றாசிரியர் லிடல் கார்ட் குறிப்பிடுவதைப்பார்ப்போம்.

«போலந்திற்கு நேரடி உதவி அளிக்க ஒரே ஒரு வல்லரசாகிய ரஷ்யாவின் ஆதரவைப் பெறுவதுதான் யுத்தத்தைத் தவிர்ப்பதற்கான ஒரே வாய்ப்பாக இருந்தது.»

– லிடல் கார்ட்: இரண்டாவது உலக யுத்தம்.–

இக்காலத்தில் சோவியத் ஜப்பானுக்கு எதிரான யுத்தத்தில் மங்கோலியப் படையுடன் இணைந்து போரில் இறங்கியிருந்தது. ➲



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பலம்.

| நாடுகள். | டிவிஷன் | விமானம் | டாங்கி. | பீரங்கி. |
|---|---|---|---|---|
| பிரா. பிரி. சோவி. | 311. | 11,700. | 15,400. | 9,600. |
| ஜெர்மன் இத்தாலி. | 168. | 7,700. | 8,400. | 4,350. |

சோவியத்திற்கு எதிராக 'சிலுவைப் போரை' நடத்த ஜெர்மனி தயாரான நிலையில் இதை முறியடிக்கும் வழிவகைகளை சோவியத் தேடியது. பாஸிசத்திற்கு எதிரான மேற்கு நாடுகளின் கூட்டு சாத்தியமற்ற நிலைமை ஏற்பட்டதைத் தொடர்ந்து, ஜெர்மனியின் முன்மொழியாக வந்த பரஸ்பரம் தாக்குவதில்லை என்ற ஒப்பந்தத்தைச் செய்து கொள்ளும்படி சோவியத்தை நிர்பந்தித்தது. 1939 ஒகஸ்ட் 23.திகதி இவ் ஒப்பந்தம் கையெழுத்தானது. இதனால் சோவியத் மீதான ஜெர்மனியின் தாக்குதலை ஊக்கப்படுத்திய ஏகாதிபத்தியங்களின் திட்டம் தவிடுபொடியாகியது. தொடர்ச்சியாக 1941 ஏப்பிரலில் ஜப்பானுடன் நடுநிலை பற்றி ஒப்பந்தத்திலும் கையெழுத்திட்டது. இதன் தொடர்ச்சியாக 1939 முதல் 1941 வரை யுத்தம் எதிலும் சோவியத் பங்கு கொள்ளவில்லை.

சோவியத்யூனியன் மீது திட்டமிட்டபடி சிலுவைப் போருக்குப் பதில் ஹிட்லர் தனது படைகளை பிரிட்டீஷ், பிரான்ஸ்சுக்கு எதிராக அனுப்பினார். இதையொட்டி பிரபல பிரஞ்சு அரசியற் பிரமுகர் ஏரியோ சரியாகக் குறிப்பிட்டது என்னவெனில் « பாஸிச ஜெர்மனி, தனது கழுத்துக் கயிற்றை அறுத்து, எஜமானனையே கடித்த நாயைப் போலிருந்தது.» என்றார்

பாஸிச ஜெர்மனி 1939 மாச் 12.ல் போலந்திற்கு ஒரு காலக்கெடுவை கொடுத்து டான் ட்ஸிங்கை (கிதான்ஸ்க்) தடுமாறும், போலந்தில் இடைவழியில் சாலை, இரும்புப்பாதை அமைக்கும் உரிமையை கோரினர். 1939 ஏப்பிரல் 3ம் திகதி போலந்தின் மீது தாக்குதலைத் தொடுக்க தயாரிப்பில் இறங்கியது. இத்தாக்குதல் நடவடிக்கை "வெள்ளைத்திட்டம்" என அழைக்கப்பட்டது. 11ம் திகதி யுத்தத்திற்கு தயாராகும் கட்டளையில் ஹிட்லர் கையெழுத்து இட்டான். 1934இல் போலந்துடன் ஏற்பட்ட உடன்பாட்டை ஏப்பிரல் 28ல் முறித்துக் கொண்டது ஜெர்மனி.

இத்தாக்குதலுக்கு முன் படைகளின் பலம்.

| நாடுகள். | டிவிஷன். | டாங். | பீரங். | விமானங்கள். | படையின் எண்ணிக்கை | கடற் படை |
|---|---|---|---|---|---|---|
| ஜெர்மனி. | 62. | 2,800. | 6,000. | 2,000. | 16,00,000. | 7நீர்மூழ்கி 2போர்.கப்... |
| போலந். | 39. | 870. | 4,300. | 800. | 10,00,000. | 5நீர்மூழ்கி மற்றும்..... |

1939 செப்ரெம்பர் 1ம் திகதி ஜெர்மனி போலந்தின் மீது தாக்குதலைத் தொடுத்தது. இது தொடங்கிய அன்று பிரிட்டீஷ்– பிரான்ஸ் 1920களில் செய்து கொண்ட "வெர் சேய்" ஒப்பந்தத்தைத் திருத்துவது என்று பேரத்தில் இறங்கினர். இது தோல்வி பெற்றது. அப்போது ஹிட்லர் தனது நெருங்கியவர்கள் மத்தியில் பிரிட்டீஷ் பிரதமர் பற்றிக் கூறியதைப் பார்ப்போம்.

« 'குடையேந்திய இந்த மனிதன்' மட்டும் என்னிடம் பெர்ஹ்டேஸ் காடனுக்கு வருவதாகஇருக்கட்டும்.... காலால் அவனைப் பின்புறம் உதைத்து மாடிப்படியில் உருட்டிவிடுவேன். இவ்வாறு நான் செய்யும்போது இதை ஏராளமான பத்திரிகையாளர்கள் இருந்து பார்க்கும்படி கவனித்துக் கொள்கிறேன்.»

–இரண்டாவது உலக யுத்தத்தின் வரலாறு தொகுதி 3.–

1ம் திகதி போலந்து யுத்தத்தை ஆரம்பிக்கமுன்பு ஒகஸ்ட் 31ம் திகதி ஒரு நாடகம் நடத்தப்பட்டது. இதற்கு என ஜெர்மனியர் போலந்து உடையில் ஜெர்மன் நகரமாகிய கிலேய்விட்ஸில் உள்ள வானொலியி நிலையத்தில் புகுந்து 'மைக்'கு முன்னால் சில குண்டுகள் வீசி போலந்து மொழயில் முன்பே தயாரித்த வாசகத்தை வாசித்து யுத்தத்தை நடத்த ஜெர்மனிய மக்களை தயார்படுத்தினர். இது தொடர்பாக முன்பே எப்படி யுத்தத்தைத் தொடங்குவது என்பதை ஒட்டி ஹிட்லர் கூறியதைப் பார்ப்போம்.

«யுத்தத்தை மூட்டி விடுவதற்கான பிரச்சார சாக்கை நான் தடுக்கிறேன். இது உண்மையானதாயிருக்குமா என்பது முக்கியமல்ல. வென்றவனை பின்னால், அவன் கூறியது உண்மையா இல்லையா என்று கேட்கப்போவது இல்லை.»

–ஹிட்லர்–

–IMT, ஆவணம் 1014-P,pp. 523–524. 1939 ஒகஸ்ட் 22; உயர் ஜென்ரல்களின் முன் ஹிட்லரின் இரண்டாவது உரை.–

செப்ரம்பர் 3ம் திகதி பிரான்ஸ், பிரிட்டன் ஜெர்மனிக்கு எதிராக யுத்தத்தை அறிவித்தது. ஆனால் தீவிர தாக்குதலில் இறங்கவில்லை. செப்ரம்பர் 9ம் நாள் பிரான்ஸ் இராணுவம் சவாரில் தொடங்கிய குறுகிய நோக்கிலான தாக்குதல் 12ம் திகதி நிறுத்தியது. இதன் ஊடாக பிரான்ஸ், பிரிட்டனும் தனது கூட்டாளியான போலந்திற்கு துரோகமிழைத்தது.

ஜெர்மனிய– பிரான்ஸ் எல்லையில் பிரான்ஸின் படை பலம்வாய்ந்ததாக இருந்தது. ஜெர்மனிய பலத்தை எல்லாவிதத்திலும் விஞ்சிநின்றது. இதை ஒட்டி ஜெர்மனிய தளபதிகள் கலக்கம் அடைந்திருந்தனர். போலந்துத் தாக்குதலின் போது பிரான்ஸ் தாக்காது



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இருக்க வேண்டுமென விரும்பினர். இதையொட்டி ஜெர்மனிய ஜெனரல்கள் கூறியதைப் பார்ப்போம்.

«பிரான்சும், பிரிட்டனும் மட்டும் தாக்குதலைத் தொடுத்திருந்தால் எங்களால் முற்றிலும் கற்பனையான தற்கதப்பைத்தான் வைத்திருக்க முடியும்.»
–பீல்ட்மார்ஷல் ஜெனரல் வெகைடல்–
–நியூ ரென்பார் விசாரனை தொகுதி, 1.–

இதையொட்டி மற்றுமொரு ஜெனரல் கூறினார்:
«1939ம் ஆண்டிலே நாங்கள் தேல்லியடையவில்லை என்றால் அதற்கக் காரணம், போலந்துடன் நாங்கள் யுத்தத்தில் நாங்கள் இறங்கியிருந்த போது மேற்கே 23 ஜெர்மன் டிவிஷன்களுக்கு எதிராக நின்ற சுமார் 110 பிரன்சு மற்றும் பிரிட்டிஷ் 4 டிவிஷன்கள் முற்றிலுமாக செயலற்று இருந்தது.»
– ஜெனரல் யோடல்–
– நியூ ரென்பார் விசாரணை தொகுதி, 1.–

1939ல் ஜெர்மன் தோற்கடிக்கப்பட்டு 6 கோடி மக்கள் உயிரையும், பலகோடி பெறுமதியான சொத்தக்களைப் பாதுகாத்து இருக்க முடியும். ஆனால் பிரான்ஸ், பிரிட்டன் சோவியத் மீதான தாக்குதலை மையமாகக் கொண்டு ஜெர்மனியை எல்லா விதத்திலும் வளர்க்க பாடுபட்டனர்! இதையொட்டி பிரன்சு ஆசிரியர் கூறுவதைப் பார்ப்போம்:
«நமது லோரைன் சேனையின் முழுச் செயலின்மைக்கான காரணத்தை அரசியல் நிலைகளில்தான் தேடவேண்டும்.»
போ:.ப்ரின்–
– A. Beanfre,Le drame de 1940, Paris, 1965, p. 206.
–

போலந்து தலைநகர் மீதான தாக்குதலில் 2 ஆயிரம் போர் வீரர்கள் இறந்தனர். 16,000 பேர் காயமடைந்தனர். ஒக்டோபர் 2வரை நீடித்த இவ் யுத்தத்தில் மொத்தமாக 66.300 போலந்து வீரர்கள் இறந்தனர். 1,33.700 பேர் காயமடைந்தனர். 4,20,000 சிறை பிடிக்கப்பட்டனர். ஜெர்மனிய தரப்பில் 10,600 பேர் இறந்தனர். 30.300 பேர்காயமடைந்தனர். 3.400 பேர் தொலைந்து போனார்கள்.

ஜெர்மனிய முன்னேற்றம் சோவியத் எல்லைகளை நோக்கி சென்றபோது சோவியத் 1939 செப்ரெம்பர் 17ம் திகதி மேற்கு உக்ரோன், மேற்கு பெலோ ரஷ்யாவுக்குள் விடுதலைப் பிரயாணத்தை மேற்கொண்டு கிழக்கு நோக்கிய ஜெர்மனிய படைகளைத் தடுத்தனர். 1940 ஏப்பிரல் 9ம் நாள் யுத்த அறிவிப்பு இன்றி டென்மார்க் நாட்டினுள் நுழைந்தது. இதே நாள் நோர்வேயில் ஜெர்மனிய படைகள் இறங்கின. பலமுக்கிய இராணுவ இலக்குகளை கைப்பற்றிக் கொண்டது. ஏப்பிரல் நடுவில் பிரிட்டிஷ்–பிரான்ஸ் படைகள் நோர்வேயில் தரையிறங்கியது. யுத்தத்தில் போராடமுடியாது யூனில் மீண்டும் வெளியேறியது. நோர்வே மக்களின் துரோகியாகிய குவீஸ்லிங்கின் "ஐந்தாவது படை" உதவியுடன் 2 மாதங்களின் பின்னர் முற்றாக நோர்வேயை ஜெர்மனி கைப்பற்றிக் கொண்டது. இதன் மூலம் டென்மாக், நோர்வேயின் பொருளாதாரங்களைப் பயன் படுத்தியதுடன், சுவீடனின் இரும்புத் தாதுவை பயன்படுத்தும் வாய்ப்பைப் பெற்றுக் கொண்டது.

பிரான்சு நாட்டுக்கு எதிரான ஜெர்மனியத் தாக்குதலுக்கு தயாரான நிலையில் இரு நாடுகளின் படைகளின் பலம்.

| நாடுகள். | டிவிஷன். | விமானம். | டாங்கிகள். | பீரங்கிகள். |
|---|---|---|---|---|
| ஜெர்மன். | 136. | 3,824. | 2,580. | 7,375. |
| பிரா, பிரிட் | 147. | 3,800. | 3,100. | 14,500. |

இப் படைப்பலத்தின் பின்னணியில் கூட பிரான்ஸ் தோல்வி பெற்றது. இதையொட்டி அந்த இராணுவ நடவடிக்கையில் பங்கு கொண்ட பிரான்சு ஜெனரல் காம்பியேஸ் கூறுவதை அடுத்த இதழில் பார்ப்போம்..

வாசகர்களே ! உங்களிடமிருந்து ஆக்கங்களையும் ஆரோக்கியமான விமர்சனங்களையும் எதிர்பார்க்கிறோம்

தொடர்பு முகவரி:
"SAMAR"
87,RUE DE COLOMBES
92600 ASNIERES SUR SEINE
FRANCE

சந்தா அனுப்ப வேண்டிய தபாற்கணக்கு
2.674.73 M
CENTRE DE CHEQUEES POSTAUX
75900 PARIS CHEQUEES
FRANCE

| | சந்தாவுக்கான அன்பளிப்பு | |
|---|---|---|
| பிரான்ஸ் | 6 பிரதிகள் | 60 F |
| | 12 பிரதிகள் | 120 F |
| ஐரோப்பிய நாடுகள் | 6 பிரதிகள் | 100 F |
| | 12 பிரதிகள் | 200 F |
| ஏனைய நாடுகள் | 12 பிரதிகள் | 225 F |

சமர்14 வெளியீடு: தமிழ் அகதிகள் இலக்கிய வட்டம் தை-மாசி (பதிவு செய்யப்பட்டது 3/16956)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்